போர்வாள்

"போர்வாள்"

சந்தா விபரம்

ஓராண்டு ரூ. 6 8 0
6 மாதம் ரூ. 3 4 0

"போர்வாள்" நிலையம்
பவழக்காரத் தெரு,
சென்னை 1.

ஆசிரியர்கள்: காஞ்சி. மணிமொழியார்
மா. இளஞ்செழியன், B. A. (Hons)

திராவிடர்
வார வெளியீடு

தனி இதழ் அணா 2
வெளி நாடு அணா 2½

வாள் 4 | சென்னை, திருவள்ளுவர் ஆண்டு 1981 மார்கழி 22 6—1—51 சனிக்கிழமை | வீச்சு 19

சிங்க ஏறுகாள்! செயல் வீரர் ஆகுங்கள்!

மஹ்தாப் வருகிறார்—கருப்புக்கொடி காட்டுங்கள்!

ஜனவரி 7-ல் சென்னை! ஜனவரி 9-ல் கோவை! ஜனவரி 10-ல் திருச்சி! ஜனவரி 11-ல் மதுரை!

இதுதான், மஹ்தாப்பின் பிரயாணத் ட்டமாம்!

அந்தந்த ஊரில் உள்ளவர்கள் அவர் ரும்போது கருப்புக் கொடி காட்டுங்கள்!

25 இலட்சம் நெசவாளர்களைப் பட்டினி போடுகிறது டெல்லி!

வீரத் திராவிட இனத்தவரை வெறும் சோற்றுக்கும் அலையவைக்கிறது டெல்லி!

நம்முடைய திருநாட்டைத் தனிநாடாக்க றுக்கிறது டெல்லி!

அந்த டெல்லி ஆட்சியின் அடையாளச் ன்னம் ஹரிகிருஷ்ண மஹ்தாப்!

மஹ்தாப் வருகிறார் திராவிடத்துக்கு!
காட்டுங்கள் காட்டுங்கள் கருப்புக்கொடி.

வடநாட்டு ஆதிபத்யத்தை வெறுக்கிறது திராவிடம் என்பதை விளக்க,

'டெல்லி தேவதைகள்' ஆட்சியை ஏற்காது தென்னாடு என்பதை முழக்க,

சேரன் செங்குட்டுவன் பரம்பரை கனக விசயர்களின் காலடியில் கிடக்க ஒப்பாது ஒப்பாது என்பதை ஒலிக்க,

ஆயிரமாயிரமாகக் கூடுங்கள்! அலை அலையாகக் கருப்புக்கொடி காட்டுங்கள்!
காட்டுங்கள் கருப்புக் கொடி!

வீரத்திராவிடர்காள்! வெள்ளம்போல் திரளுங்கள்!

மஹ்தாப் செல்லுமிடமெங்கும் கருப்புக்கொடி காட்டுங்கள்!

—1—50 ஞாயிறு காலை 9 மணிக்கு சென்னை எஸ்பிளனேட் ட்டக் கல்லூரிக்கு எதிரில் உள்ள யுனைடெட் இந்தியா இன்சூ ன்ஸ் கம்பெனிக்கு வருகிறார் மஹ்தாப்! வீரர்களே! வருக வருக!

கழகச் செய்திகள்

—(*)—

பெண்கள் உலகில் திராவிட முழக்கம்

17-12-50 ஞாயிறு பிற்பகல் இரண்டு மணிக்கு சென்னை சேப்பாக்கம், அருணாசல ஆசாரி தெரு, 13 எண் தோழியர், அலர்மேலு அப்பாத்துரை அவர்கள் இல்லத்தில் சென்னை திராவிடப் பெண்கள் முன்னேற்றக் கழகக் கூட்டம் நடைபெற்றது.

23 செயல் உறுப்பினர்கள் வந்திருந்தனர். திருமதி டாக்டர் தருமாம்பாள் அம்மையார் அவர்கள் தலைமை தாங்கினார்கள். கூட்டத்தின் நோக்கத்தைப்பற்றி செயலாளர் அலர்மேலு அம்மையார் அவர்கள் விளக்கிப் பேசினார்கள். உறுப்பினர்களை சேர்ப்பதைப்பற்றியும், தொடக்க விழா நடத்துவதைப் பற்றியும் தலைவர் தமது தலைமையுரையில் குறிப்பிட்டார்கள். பின்பு தோழியர் மூவலூர் இராமாமிர்தத்தம்மையார் அவர்கள் கழகத்தின் ஆக்க வேலைகள் குறித்துப் பேசினார்கள். கடைசியாக கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டன.

1. விரைவில் கழகத்தின் தொடக்க விழாவை சென்னையில் நடத்துவதென இக்கமிட்டி தீர்மானிக்கிறது.

2. தோழியர் ஏ. கே. டி ஆதிலக்குமி அம்மையார் அவர்களை விழாவிற்குத் தலைமை தாங்கும்படி கேட்டுக் கொள்கிறது.

3. அன்னை ஈ. வே. ரா. நாகம்மையார் படத்தைத் தொடக்க விழாவில், திறந்துவைக்க தோழியர் ஜோதீஸ்வரி அம்மையார் அவர்களை இக்கமிட்டி தேர்ந்தெடுக்கின்றது.

* * *

திராவிட முன்னேற்றக் கழகம்

புதிய கிளைகள் தோற்றம்

கவுந்தப்பாடி: கோவை மாவட்டம் கவுந்தப்பாடியில், 14-12-50 அன்று தோழர் மா. தங்கவேலு இல்லத்தில், தோழர் இரா. கரியமாணிக்கம் தலைமையில் நடந்த கூட்டத்தில் தி. மு. க. கிளை திறந்து வைக்கப்பட்டது. அவ்வமயம் தோழர்கள் சக்கூர், குமாரசாமி ஆகியோர் சொற்பொழிவாற்றினர். தோழர் செ. சுப்பிரமணியம் தி. மு. க. பொதுச்செயலாளர் அண்ணா அவர்களின் உருவப்படத்தைத் திறந்து வைத்தார். இறுதியில், கீழ்க்குறித்த வண்ணம் செயற்குழு அமைக்கப்பட்டது:— செயலாளர்: இரா. கரியமாணிக்கம். துணைச்செயலாளர்:— சி. ஈ. வேதநாயகம், பொ. உறுப்பினர்:- இரா. துரை, ப. இரங்கசாமி, கே. கே. ஆர். சாமி. மற்றும் எழுவர் கொண்ட செயற்குழு தேர்ந்தெடுக்கப்பட்டது.

> **நாகலாபுரம்**
>
> [திண்டிவனம்]
>
> **தி. மு. க. துவக்க விழா**
>
> 6—1—51 சனி மாலை 6 மணிக்கு திண்டிவனம் நாகலாபுரம் குளக்கரை மைதானத்தில் நடைபெறும்.
>
> பேச்சாளர்:
>
> **இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.,**

கீழ்வழித் துணையாங்குப்பம்: இக்கிராமத்தில் 15-12-50 காலை "பகுத்தறிவுப் பாசறை" என்ற பெயரில் ஓர் வாசக சாலை ஏற்படுத்தப் பட்டது. அது காலை, அங்கத்தினர் அனைவரும் என். நடராசன் தலைமையில் கூடி, தோழர். என். நடராசன் அவர்களைச் செயலாளராகவும், தோழர் கோ. வீரவசந்தலுவை துணைச் செயலாளராகவும், தோழர் கே. காளியப்பனை நிதி உறுப்பினராகவும், தோழர்கள் வே. மு. தானப்பன், செ. சண்முகம், கு. கன்னியப்பன் மூவரும் விளம்பர உறுப்பினர்களாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டுத் தோழர்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டனர். நிதி நிலையை உத்தேசித்து பிறகு இவ்வமைப்பை திராவிட முன்னேற்றக் கழகமாக மாற்றுவதெனத் தீர்மானிக்கப் பெற்றது:

ஆத்துவாம்பாடி

வடார்க்காடு மாவட்டம் ஆத்துவாம்பாடி கிராமத்தில் 22-12-50ந் தேதி புதிதாக கழகம் நிறுவப்பட்டது. அவ்வமயம் கீழ்க்கண்ட செயல் உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

செயலாளர். V. பெருமாள். உதவி செயலாளர். M துரைசாமி. பொருளாளர்: K. வேலு. விளம்பர உறுப்பினர்கள். K. ராமன்.

செயற்குழு உறுப்பினர்கள்

K. கோபால். நாராயணசாமி. S. தண்ணிமலை.

—

(10-ம் பக்கத் தொடர்ச்சி)

பட்ட முரசொலி இனித் தொடர்ந்து, கேரள மெங்கும் முழங்கியே தீரும்!

இம் முழக்கம் பலர்காதைத் துளைக்கச் செய்யும்! அவர்கட்கு வேதனையாகக்கூட இருக்கும். வேதனையின் விளைவாக மீண்டும் கிண்டல் செய்யத் தொடங்குவர். கேலியும், கிண்டலும் செய்து தனி இன்பம் காண்போருக்கு ஒன்று கூறவிரும்புகிறோம்: நாஞ்சில் நாட்டில், தி. மு. க. மாநாடு நடைபெற்ற தென்றால் அங்கு எங்கள் பட்டாளம் ஏற்கனவே இருக்கிறதென்று பொருள். சுயேச்சைக் கூட்டுத்! திராவிடத்தை விழையும் மக்கள் கூட்டம் அங்கு இருக்கிறதென்பதற்கு அத்தாட்சி அது. 'அரசியல் அரிச்சுவடி' அறிந்தோர் இதை ஏற்றுக் கொள்வர். மட்டரகங்களைப் பற்றி நமக்கு அக்கறை இல்லை.

தெற்கே வீசத்தொடங்கி விட்டது தென்றல்! காலம்வரும்! பருவக் காற்றுகள் வடக்கிலும் மேற்கிலும் வீசியே தீரும்.

—

சிந்தனை ஓவியம்:

சுமைதாங்கி!

[தில்லை அறிவழகன்]

என்னுடைய வேலை இரயில்வே இன்ஜின் ஓட்டும் வேலையல்ல. ஆனால் தொல்லையானது.

ஒயிட் பேண்ட், புஷ்கோட், பளபளக்கும் பேட்டா பூட்ஸ், அணிந்திருப்பேன். உடனே 'ரயில்வேகார்டு' என்று நினைத்து விடாதீர்கள்.

பெரிய கட்டிடத்தின் அழகிய அறையில், குஷன் நாற்காலியில், மின்சார விசிறி வீச, சில நேரங்களில் படித்துக்கொண்டோ எழுதிக்கொண்டோ உட்கார்ந்திருப்பேன். பலரும் வந்து வந்து போவர். ஆனால் ஸ்டேஷன் மாஸ்டரல்ல.

வருகிறவர்களை, "பிளீஸ் கம் இன் [Please Come in] உள்ளே வாருங்கள்!" என்று இரண்டு மொழியிலேயும் முகமன் கூறி, என் நாற்காலியிலிருந்து எழுந்து வரவேற்று, அவர்களை உட்காரவைத்து, நான் நின்றுகொண்டுதான் பேசுவேன். இப்படிச் சொன்னவுடனே,

மரியாதையுள்ள பெரிய இடத்துப் 'பிள்ளை' என்று நினைத்து விடாதீர்கள். ஏனெனில் நான் மரியாதையற்ற ஏழையல்ல.

"......வந்தவர்களின் காலைப் பிடித்து.........விடுவேன்...."

ஓஹோ! பங்கா இழுக்கிற பியூன்கள் கூட்டத்தைச் சேர்ந்தவன் என்று என்னை நினைத்து விடாதீர்கள்.

மிக அழகிய இளம் பெண்களின் பாதத்தைக்கூட என் கையால் பிடித்து..................அணிவித்தால் கூட அவர்கள் கொஞ்சமும் கூச்சமின்றி, லிப்ஸ்டிக்கால் சிவந்திருந்தும் தங்கள் உதடுகளை இன்னும் குழையக் குவித்து, அவர்கள் முகத்தையே பார்த்து ரசித்துக் கொண்டிருக்கும் என் கண்களிடம் அவர்கள் கண்களை ஒட்ட வைப்பதுபோல் பார்த்து, "பரவாயில்லை — இன்னொன்று தேவை" என்று கூறுவார்கள்.

'அப்படியா சேதி! ஆரணங்குகளின் காலைப்பிடித்துப் பல்லிளிக்கும் கபவாளிப் பயலே" என்று என்னைத் திட்ட ஆரம்பித்து விடாதீர்கள்.

இப்படியெல்லாம் என்னைச் செய்யச் சொன்னவர்கள், பாவையர் என்றாலே மிட்டாய்க் கடையில் ஈ மொய்ப்பதுபோலச் சுற்றி, கண் ஜாடை காட்டி மயக்கியும் ரயில்வே ஸ்டேஷன்களையும், லேடீஸ்ஸ்கூலையும், வீமன்ஸ் ஹாஸ்டலையும் சுற்றிப் பருந்துபோல் வட்டமிட்டும், பேபிகள், குமாரிகள், நட்சத்திரங்கள் ஆகியவர்களின் உடலமைப்பின் ஆயிரங்கோணங்களையும் எப்போதும் பார்த்து ரசிப்பதற்காக ஓரே 'நட்சத்திரத்தின்' ஆயிரக்கணக்கான படங்களைச் சேர்த்தும், காதலன்றி வேறு பேச்சறியேன், செயலறியேன் என்றிருக்கும் வாலிப முறுக்கேறிய தோழர்களல்ல. காரணம் அதுபோன்ற நண்பர்களே எனக்குக் கிடையாது.

தூய்மைப் புராணம் பேசி, ஆத்மார்த்தம் சாந்தம் முதலியவற்றை விளக்கி, விவேகானந்தரின் பிரம்மச்சரியத்தின் உயர்வை எடுத்துக்கூறி, ரமண ரிஷியிலிருந்து நேற்று மாண்ட திருநீற்றுச் சாமியார் வரையில் உள்ளவர்களின் மகிமையைப் பாராட்டி, "காலம் ரொம்பக் கெட்டு விட்டது! இப்போ உலகத்தில் வாழ்கிறவர்களெல்லாம் மனிதர்களா? ஏய்ச்சிப் பிழைக்கிறதே வேலையாயிருக்கு! எங்கேயும் விபசாரம் பெருகிடுத்து' என்று கோபப்பட்டு, தன் தலைச்சன் மகன், கலப்புமணம் செய்து கொள்ளப் போகிறேன் என்றதற்காக அவனை வீட்டைவிட்டு விரட்டி, அதிலேயும் நிம்மதியடையாமல், "கழுதையாட்டம் வளர்ந்த பின்னும், இந்தக் குட்டிகள் ஊர் சுற்றக் கிளம்பிடுதுகளே" என்று அருவருப்புடன் உலகத்தைப் பார்க்கும் என் தந்தையாரேதான் இந்த வேலையைப் பார்க்கும்படி என்னை அனுப்பினர். அவர் மாத்திரமும் அல்ல!

முப்பது வயதிற்குள்ளேயே நாலைந்து குழந்தைகளுக்குத் தகப்பனாகி, ஹெட்கிளார்க் வேலையில் கிடைக்கிற சம்பளம் வயிற்றுக்கும் வாய்க்கும் கூடக் காணாமல், 'எது எப்படியானால் என்ன?' என்றும் இருக்க முடியாமல், வாழ்க்கைப் பொறுப்பேற்றுக்கொண்டு வாழமுடியாமல் தவிக்கிற என் சிற்றப்பாதான் ஊதியம் வளர வசதியிருக்கிறது இந்த வேலையில் என்று கூறி மிக அவசரமாக இந்த வேலையை வாங்கித் தந்தார்.

பெரியவர்களின் ஆசிர்வாதமும் இல்லாமலில்லை!

காலையில் எழுந்தால் மாலை வந்து இரவு நெடுநேரம் ஆகும் வரையிலே கம்பராமாயண ரசனையில் இதுவரை எவரும் கண்டு

பிடிக்காத அற்புதத்தைக் கண்டு பிடிக்கப் போவதாக நினைத்து இராமாயணத்தைப் புரட்டிக் கொண்டே,

டேய், கற்றது கைமண்ணளவுடா கல்லாதது உலகளவுடா, சகலகலாவல்லியாகிய சரஸ்வதியே இன்னும் படித்துக் கொண்டே இருக்குறாடா! அதனாலே நீ எப்பவும் புத்தகமும் கையுமாகவே இருக்கனும்டா! என் தாத்தா எண்பது வைசுலே கூட 'முருகா! முருகா!.........''ன்னு ஆரம்பிச்சிட்டாருன்னா எதிரே அப்படியே வள்ளி தெய்வயானையோடு வேலன் வருவாருடா! இத்தனைக்கும் பத்தாவதுவைசிலே தாத்தா படிச்ச பாட்டுடா அது! அவர் இருக்கட்டும் என் அப்பா பெரிய சாவியால் என் மண்டையிலே அடிச்சு என பன்னிரண்டாவது வயசிலே சொல்லிக் கொடுத்தாரே, திருவாசகம், திருப்புகழ் அதை இன்னும் மறக்கலேடா நான். நீ வேணும்னு கேள் நான் முதலடியிலிருந்து கடகடன்னு தவறாம சொல்றேன், டேய் உனக்குத் தெரியுமா முழுசா ஒரு அருணகிரிநாதர். அதுதான் சொல்றேன் படிக்கிறவனுக்கு எந்த வயதில் படிச்சாலும் ஏறுப்டா............ என்று முன்னெல்லாம் இப்படி நாள்தோறும் கூறி வந்த தாத்தா,

'இனிமே எங்கே மூளையில் ஏறப்போவுது! அந்தக் காலத்திலே நாங்க பத்து வயசிலேயே படிப்பை முடிச்சிட்டு நிலபுலன் மேலே போயிடுவோம். அதான் ஒழுங்கு. உலக்கையர்ட்டம் வளர்ந்திருக்கு, பிள்ளை. இனிமேயாவது இவன் படிக்கிறதாவது. அதெல்லாம் நடக்காத கதை. எங்கேயாவது வேலையில் போட்டாதான் பிள்ளை உருப்படும்.''

இப்படி நூறுமுறைகூறி ஆசீர்வதித்தபின்தான் நான் இந்த வேலைக்கு வந்தேன்.

'மூணும் தடவையும்தான் கோட்டடிச்சிட்டானே, இனிமே எங்கே படிப்பு வரப் போகிறது! நீதான் ஹெட்கிளார்க்கா இருக்கியே அவன் கேட்கிறபடி, ஒரு கிளார்க்வேலை தான் பார்த்துப் போடேன்'' என்று தந்தையார் கூறிய போது,

''அவருக்குக் கிளார்க் வேலை கேட்குதாக்கும்! எம், ஏ, பி ஏ. படிச்சவனே முட்டியடிக்கிறான் கிளார்க் வேலைக்கு! மூணும் தடவை 'இண்டர்' கோட்டடிச்சவனை தாம்பூலம் வைச்சில்ல அழைக்கிறாங்க! எங்கேயாவது செருப்புக்கடை இருந்தால்...... பார்க்கலாம் வேலை''

என்று சின்னப்பா திருவாய் மலர்ந்தருளியபின்தான் இந்த வேலைக்கு நான் வந்தேன்.

என்வீட்டில் அன்றொருநாள் காலை......பல் விளக்கவில்லை.......உடையெல்லாம் ஒரே அழுக்கு......பாதியில் விட்டுப் போன அந்த நாவலை எடுத்து வைத்துக் கொண்டு படிக்க ஆரம்பித்தேன்

''காலையில் குளித்து...... தெய்வ பூஜை.......திருநீறு...... ஒரு பக்தி......விசுவாசம்....... ஒன்றும் கிடையாது''

''உருப்புடா பிள்ளையா?''

''வேட்டியைப்பாரு''

''இராத்திரியெல்லாம் சுத்தரான்!'

''காலிக்கழுதை''

பொறப்பும் அன்பும் மிக்கவர்கள், போகிற வருகிறபோது இப்படிச் சொல்லிக்கொண்டிருந்தார்கள்

நான் என் நாவலில் மூழ்கிக் கொண்டிருந்தேன், இவைகளும் என் காதில் விழாமலில்லை. கேட்டுக் கொண்டுதானிருந்தேன். ஆனால் அவர்களைப் பார்க்கும்போது அனுதாபம் தான் உண்டாகும் எனக்கு. ஒரு காலத்தில் கோபம் பொங்கியது உண்டு இதிலே நூற்றில் ஒரு வார்த்தை பிறர் கூறக் கேட்டபோதுகூட. அப்பொழுது ''ஒழுங்காக'' இருந்தேன். ஆனால் இப்பொழுதும் நான் ஒன்றும் கெட்டுவிடவில்லை. எல்லோரையும் திருப்திசெய்ய முடிவதில்லை.

அதான் கோட்டடிச்சுதே! எங்கே முடிகிறது?

திடீரென்று தம்பி ஒருவர் தான் என்னிடம். அதுதான் தொல்லையாகப் பட்டது.

''இங்கே படிப்பதைவிட ஒரு செருப்புக் கடையில் செருப்பு தைத்துக்கொண்டு படிக்கலாம்'' என்மனம் சொல்லியது. ஆனால் வாய் சொல்லவில்லை. காரணம் மனதில் ஒன்றை நினைத்து வாயால் வேறொன்றைக் கூறுததால் பல தடவை எனக்கு நல்ல தண்டனை கிடைத்திருக்கிறது.

தம்பி தந்த கடிதத்தை மௌனமாய்ப் படித்தேன். உடனே வருகிறேன் என்று கடிதம் எழுதிப்போட்டேன்.

அப்பொழுது ஒப்புக்கொண்ட வேலையைத்தான் பார்த்துவந்தேன். இந்தவேலை நமக்கு ஏற்றதா இல்லையா என்று கவலைப்படும் நிலையில் நான் இல்லை.

வேலையையோ சிற்றப்பாவின் நண்பரொருவர் மிகப்பிரயாசைப்பட்டு வாங்கித்தந்து விட்டார். சம்பளம் கிளார்க் வேலையில் கிடைக்கக் கூடியதைவிட ஐந்துரூபாய் அதிகமாகக் கிடைத்தது.

வேலையைப் பற்றிய விளக்கம் முதலிலேயே தந்துள்ளேன். வேறொன்றுமில்லை. வடநாட்டான் கடையொன்றில் செருப்பு விற்கும் வேலைதான். ஆங்கிலத்தில் 'சேல்ஸ்மேன்' என்றால் கொஞ்சம் அழகாக

இருக்கும் என்பது மாத்திரமல்ல, அதிலே 'மேனேஜர்' ஆகலாம் என்ற முன்னேற்றமும் தொனிக்கும்.

உயர்ந்த ஜாதியில் பிறந்து இந்த தாழ்ந்த வேலை செய்யலாமா?

பணக்கார உறவினர்கள் என்ன நினைப்பர்?

உயர் இடத்து நண்பர்கள் என்ன பேசுவர்?

கிராமத்தார் விஷயத்தைப் புரிந்து கொள்ளாமல் என்ன கேலிசெய்வர்?

இந்தக்கவலையெல்லாம் எனக்கில்லை. ஆனால் நாட்டின் திராவிடரியக்கக் கொள்கைகளை உயர் நிலைப்பள்ளியிலிருந்து கல்லூரி வரையில் விடாப் பிடியாகப் பிடித்து, வடநாட்டான் வாணிபச்சுரண்டலை ஆயிரமாயிரம் பேர்களிடம் எடுத்துக்கூறி, விளக்கி, அதனால் பலரின் ...ராதம் பெற்றும் குறிக்கோளை விட்டுக் கொடுக்காமல் இருந்த நான் வடநாட்டான் கடையில் வேலைபார்க்க வேண்டிய நிலை ஏற்பட்டதே என்பதுதான் என்னுடைய கவலை.

கல்லூரி நண்பர்களும், மற்றும் எனைப்பற்றி உயர்வாகக் கருதிக் கொண்டிருப்பவர்களும் என்னை 'ஒருமாதிரியாகப் பார்ப்பார்களே' என்பதற்காக, கவலைப்படும் நிலையில், அறிவியக்கக் கொள்கைகள் புகுந்த என்மனம் இல்லை.

தென்னாடு வடநாட்டிற்கு மார்க்கட்டாக இருக்கக்கூடாது என்று போரிட்டு வந்த நானே வடநாட்டான் செருப்புக்களின் சுமை தாங்கியாக வேண்டிவந்ததே என்ற எண்ணம்தான் என்னை வாட்டியது!

நான், சென்னை மாகாண பூகோள வரலாற்றில் பல தடவை படித்திருக்கிறேன் :—

'தென்னாட்டில்தான் ஆடுகள் அதிகம். ஆகவே தோல் அதிகமாக உற்பத்தி செய்கிறார்கள். ஆனால் இங்குள்ள நாலணா தோல் கான்பூர் போன்ற வடநாட்டு நகரங்களுக்குச் சென்று நாலுரூபாய் செருப்பாக உருவெடுக்கிறது."

இதை உணர்ந்து படித்த போதே வயிறு எரிந்தவன். ஆனால் இப்பொழுது வடநாட்டிற்குச் செருப்பு விற்றுப் பணம் அனுப்பும் கங்காணியாக உட்கார்ந்திருக்கிறேன். என்ன விபரீதம்!

வட இந்திய பொருளாதாரச் சுரண்டலின் மேல் உள்ள கோபத்தால் வடநாட்டு ஷூ கம்பெனியில் வேலை வேண்டாம் என்று வெளியில் ஓடிவர நான் தயார் என்பது மாத்திரமல்ல. என் இதயமும் என்னை வெளியில் தான் பிடித்துத் தள்ளுகிறது. ஆனால் நான் மனம் துணிந்து அப்படி வெளிவந்துவிட்டால், குடும்பத்தின் விரோதியாக வேண்டும்! பிரயாசைப்பட்டு வேலை வாங்கித்தந்த நண்பரின் மரியாதைக் குறைவுக்குக் காரணமாக வேண்டும்.

அந்த வேலையை உதறி எறிவதன் மூலம் என் வாழ்வு வளப்பம் உறாமல் போனால் போகட்டும்! நான் இதனால் பட்டினி கிடந்து சாகக்கூட தயார்தான்! என் இலட்சிய வெற்றிக்காக எத்தகைய தியாகத் தீயில் குதிக்கவும் என் உள்ளம் 'ஆஹா சரி' என்று கூறத்தான் செய்கிறது.

ஆனால்....ஏதோ ஒரு பாசம் அது என்ன பாசம் என்பது எனக்கே புரியவில்லை—அது என்னை அந்த வேலையைவிட்டு அப்படி இப்படி நகரமுடியாமல் செய்து விட்டது. என்னைப் போலவும் என்னை விடவும் அதிகமாகப் படித்தவர்களிற் பலர் இந்த வேலைகூட கிடைக்காமல் தவிக்கிறார்களே! ஒருக்கால் அதை எண்ணிப் பார்த்ததால் இந்தப் பாசம் எனக்கு ஏற்பட்டிருக்கிறதோ? இருக்கலாம். அநேகமாக அப்படித்தான் இருக்கும்.

என் மீது பொறுப்பும், வாஞ்சையும் மிக்க அண்ணன் ஒருவர் இருக்கிறார். அவரிடம் சொன்னால், "வடநாடாம் தென்னாடாம், போடா மூடா!" என்று விரட்டுவார் என்பது மாத்திரம் அல்ல. இச் சொற்களைக் கேட்டவுடனே இந்திய யூனியன் இரண்டாகவே துண்டாடப் பட்டுவிட்டது என்று நினைத்து, என்னை இனிமேல் அவர் வீட்டு வாயிற்படியையே மிதிக்கக் கூடாது என்று சொன்னாலும் சொல்லிவிடுவார்.

அவரே இப்படி என்றால் உறவினர் வேறு எவரிடம்தான் சொல்லமுடியும்? நண்பர்களிடம் சொல்லலாம்! எனக்கு நெருங்கிய நண்பர், ஒரு சைவ அன்பராகும். அவரிடம் இதைப்பற்றி எப்படியோ சொல்லும்படியாகிவிட்டது ஒரு நாள்.

"என்னப்பா இது? நீ வேலை பார்க்காவிட்டால் இன்னொருத்தன் வேலைபார்க்கப் போகிறான். இதற்காகப் போய் வேலையை விட்டுவிடலாமா! அசுத்தப்பைத்தியமப்பா நீ' என்று அன்போடு சொல்லி இலேசாகச் சிரித்தார்.

"நல்லது சைவரே! நம்மூர், பெரியகடையொன்றில் வேலை ஒன்று காலியாக இருக்கிறது. ஏற்றுக்கொள்கிறீரா?" என்றேன்.

"சும்மா வீட்டில் உட்கார்ந்திருப்பதைவிட நல்ல சம்பளமாக இருந்தால் தாளாரமாகப் பார்க்கலாமே! என்ன வேலை?" என்றார்.

"கஷ்டம் ஒன்றுமில்லை சார், சும்மா கசாப்புக் கடை வேலைதான்" என்றேன்.

அவருக்குக் கோபம் பொங்கியது.

"என்ன சார், நீங்க பார்க்காமல் போனால் வேறு எவனாவது பார்க்கப் போகிறான்!" என்றேன்.

அவர் முகம் சுணங்கியது.

குடும்பத்தின் சுமைதாங்கி நான்! வடநாட்டுச் செருப்புகளின் சுமைதாங்கியும் நான் தான்!

என்னால் பொறுக்க முடியவில்லை. பொறுக்க முடியாது இனி துயரம், போரிட வேண்டியதுதான் என்ற முடிவில் வீடு நோக்கி வந்தேன்.

வீட்டில் எனக்காக ஒரு புதுச் செய்தி காத்திருந்தது.

எனக்குக் கல்யாணமாம்! ஆயிரக்கணக்கில் அள்ளித்தருவார்களாம்! பெண்தான் கொஞ்சம் கறுப்பாம்! முகம் 'பரவாயில்லை' என்று சொல்லக் கூடியதாம்! தவறிதான் யானைக்கால் வந்ததாம்! அப்படியொன்றும் பெரிதாய் தோன்றாது அவர்கள் குணத்தையும் பணத்தையும் பார்க்கும்போதாம்! செருப்புக்கடையில் வேலை பார்க்கிறவனுக்கு இது போதுமாம்!

வேகமாக ஓடிக்கொண்டிருக்கும் ரயில் வீழ்ந்தால் எப்படியிருக்கும்? அப்படித்தான் இந்தச் சொற்களும் வந்து வீழ்ந்தன என் செவியில்!

ரயிலுக்குள் நசுங்குவோர் எப்படி மரணஒலி எழுப்புவார்களோ அப்படித்தான் என் இதயத்தை நசுக்கிப் பிழிந்தன இந்தச் சொற்களின் வீழ்ச்சி!

வெளிப்படையாகச் சொல்கிறேன்:—

நான் வேலை பார்க்கும் கடைக்கு சில அழகிய ஆங்கிலோ இந்தியப் பெண்கள் வழக்கமாக வருவார்கள்! அப் பெண்களை, 'பெண்கள்' என்று சாதாரணமாகக் கூறுவதைவிட அழகுராணிகள் என்று சொன்னால்தான் பொருத்தமாக இருக்கும் இது என் தவறான எண்ணமாகக்கூட இருக்கலாம். ஆனால் என் எதிர்கால மனைவியைப் பற்றி பேச்சு ஆரம்பித்தபோது என் கண்களுக்கு அந்த ஆங்கிலோ இந்தியப் பெண்கள் முன்னரெல்லாம் இருந்ததைவிட மேலும் இரண்டு பங்கு பேரழகிகளாகத் தான் தென்பட்டனர்.

நம் நாட்டுப் பெண்டிர் 'ஷூ' எங்கே போட்டுக் கொள்கின்றனர்? அப்படிப் போட்டுக்கொண்டால் கூட நாம் அவர்கள் கால்களைத் தொட்டால் தங்கள் 'தெய்வீகக் கற்பு' கெட்டுவிடும் என்று நினைக்கிறவர்களல்லவா? இவர்கள் கிடக்கட்டும்.

அந்த ஆங்கிலோ இந்தியப் பெண்கள் ஒரு மாதத்திற்குள் கடைக்கு வருகிற இரண்டு மூன்று தடவைகளில் ஒருதடவையாவது நிச்சயம் ஏதாவது வாங்குவார்கள்.

நியூபேஷன் வந்து விட்டதா? ஓல்டு பேஷன் போய் விட்டதா? என்று பார்க்கப் பலதடவை வந்து சேர்வார்கள்!

இருக்கிற 'ஷூஸ்' எல்லாம் தங்கள் பாதங்களுக்குப் பொருத்தமாக இருக்கிறதா? இல்லையா? என்பதைப் பார்க்க என்னைப் பற்பல முறைகள் ஷூக்களை அவர்கள் கால்களில் போடச்சொல்லிப்பார்ப்பார்கள். அது எனக்குத் தொல்லையல்ல என்பது மாத்திரமல்ல. இன்பம் தருவதுகூட!

ஏனெனில் அந்தக் கோஷ்டியே அழகுராணிகள் கூட்டம்தான்! அதிலே ஒரு பேரழகியும் இருந்தாள்! நம் கவிஞர் பெண்ணைக் கற்கண்டு என்றார். உண்மைதான்! தொட்ட இடமெல்லாம் இனித்து இன்பம் தரும் நவீனக்கரும்பு அப்பெண்.

கால் என்றால் அதிலே அழகில்லையா என்ன? அமெரிக்காவில் ஓர் அழகி, ஒரு முரட்டுக் குதிரையில் சவாரி செய்து நடிக்கவேண்டியிருந்ததால் பல்லாயிரக் கணக்கான ரூபாய்களுக்கு தன் அழகு கால்களை 'இன்ஷ்யூர்' செய்தாளாம். பாரிஸில் வேறோர் அழகியின் காலுக்கு முதற் பரிசு கொடுத்திருந்ததாக எழுதி, பத்திரிகையில் அவள் கால்கள் படமெடுத்துப் போட்டு வந்தன!

என் கடைக்குவரும் பேரழகி பாரிஸில் இருந்திருந்தால், நிச்சயம் முதற் பரிசு பெற்றிருப்பாள். ஆனால் அவர்களுக்கு நான் என்ன பரிசு கொடுக்க முடியும்? என் கடைக்கு வருகிற 'ஷூ'க்களில் மிகச் சிறந்த தொன்றைத் தேடி எடுத்து வைப்பேன். ஆனால் அதை அவ்வழகு ராணி கடைக்கு வந்தவுடன் அவள் காலில் எடுத்துப் போட்டுவிடுவதில்லை. அப்படிச் செய்து விட்டால் நான் அவள் கால்களைக் காணும் வாய்ப்பை உடனே இழக்க வேண்டிவந்துவிடும் அல்லவா?

அவ்வளவு புகழ அவள் கால்கள் தான் எப்படியிருக்கும் என்று கேட்கலாம். வழவழப்பிற்கு மூங்கிலை ஒப்பிட்டால் அதன் முள் ஞாபகம் வருகிறது! மிருதுவிற்கு வாழைத்தண்டை ஒப்பிட்டால் அதிலிருந்து கசியும் நீர், நினைவுக்கு வருகிறது. பிடித்துப் பார்ப்பதற்கு 'அல்வா'த் துண்டுபோல் இருக்கும் என்று சொன்னால் இரண்டு நாளிலேயே கெடுகின்ற நிலை ஞாபகத்திற்கு வருகிறது!

ஆகக்கூடி அப் பேரழகியின் கால்களுக்கு உவமை தேட எனக்கு நேரமில்லை! கையில் பிடித்துப் பார்த்து ரசித்துக் கொண்டிருப்பவனல்லவா நான்?

என் கண்களுக்கு மட்டும் இப்படித் தெரிந்திருக்கலாம் என்பதை நான் ஒப்புக் கொள்ளமுடியாது! கண்கள் உள்ளவர்களுக்கெல்லாம் இப்படித்தான் தெரியும் என்பதே என் எண்ணம்!

ஆனந்தத்தைத் தரும் அவள் கால்களையே எவ்வளவு நேரம் வேண்டுமானாலும் பார்த்து ரசிப்பதையே என் வேலையாகக்கொண்டாலும் கொண்டுவிடுவேன்! இன்னும் கூட.........

"செருப்புக்கடை பயல்தானே இவன், புத்தி எப்படி இருக்கும்" என்பீர்கள். இதையே ஒரு ஷெல்லியோ, கம்பனோ, "அனிச்ச மலர்க்கொடியாள் நடந்தபோது முகர்ந்தாலே வாடிவிடும் அனிச்ச மலர், அவள் அழகிய பாதங்களை நெருஞ்சி முள்ளெனக் குத்தியது" என்று எழுதிவிட்டால்

(18-ம் பக்கம் பார்க்க)

திராவிடப் பெண்கள் முன்னேற்றக் கழகம்

சென்னை.

7—1—51-ல் நடக்க இருந்த திராவிடப் பெண்கள் முன்னேற்றக் கழகத் துவக்க விழா 21-1-51-க்கு மாற்றப்பட்டிருக்கிறது. முழு விவரம் பின்னர் அறிவிக்கப்படும். எதிர் பாராத சில அசந்தர்ப்பங்களினால் மாற்றப் பட்டிருக்கிறது.

அலமேலு,
செயலாளர்.

பகுத்தறிவு வாதிகள் — அன்றும் இன்றும்!

மதிப்பிழந்த கொள்கைகளை மார்போடணைத்துக் கொண்டு மருண்ட பாதையில் நடப்பதால் மக்களது மதியில் மந்தமும், மனதில் மருளும் படர்வதோடு மட்டுமல்ல, மக்களது வாழ்வு வேதனையால் தாக்குண்டு வீழ்கிறது. இன்பத்தின் இருப்பிடமாக விளங்க வேண்டிய வாழ்க்கை இன்னலின் பிறப்பிடமாக ஆகிறது! ஊசிப்போன-உளுத்துப்போன எண்ணங்களும், ஏற்பாடுகளும் உணர்வைப் பாழ்படுத்துவதோடு மட்டுமல்ல உள்ளத்தின் வலிவையும் சிதைக்கின்றன உலகின் உயர்ந்தவாழ்க்கைக்கு அதுவே தடைக்கல்லாகவும் அமைகிறது. கண்மூடித்தனமான பழக்க வழக்கங்கள் கருத்தைக் குருடாக்குவதோடு மட்டுமல்ல, சிந்திக்கும் ஆற்றலைச் சிறையில் தள்ளுகிறது. ஆண்மையை அழிக்கிறது, தன்னம்பிக்கையைத் தகர்த்து, முயற்சியை முறியடிக்கிறது.

சொந்த வாழ்வு சுகப்படவேண்டுமென்ற எண்ணங்கொண்ட சுயநலக்காரர்கள், சூதுமதியினர், சுரண்டும் கொள்கையினர்; மனிதன் துன்பச் சுழலில் சிக்கித்துடித்தபொழுது, அதன் உண்மைக் காரணத்தைக் காணவொட்டாதபடி தடுத்து, அவனது மனத்தை ஆண்டவன், ஆலயம், அந்த உலகம், காளியாயி காட்டேரி என்பனவற்றின் மீது, திருப்பிவிட்டு, தலையெழுத்து, கர்மம், விதி, வினை முதலியவற்றைக் கொண்டு ஆண்மைக்கு அடிமைத்தளை பூட்டி, அறிவுக்கு முகமூடி போட்டனர். அதன் விளைவாக சிலர்க்கு வாழ்வு சுவையுள்ள கனியாக, தித்திக்கும் தேனாக, பலருக்கு வாழ்வு சுழன்றடிக்கும் சூறாவளியாக, சுமக்க முடியாத பாரமாக மாறியது! குருமார்களும், மதவாதிகளும், தாங்கள் விதைத்த குருட்டுக் கோட்பாடு என்ற நச்சு விதைகளுக்கு, கட்டுக்கதைகள் என்ற உரங்களைத் தூவி, கற்பனைத் தத்துவம், என்ற நீரைப்பாய்ச்சினர். அதன் பயனாக நஞ்சு கலந்தது மக்களது உள்ளத்தில், உணர்வில், வாழ்வின் அனைத்திலும்! அதன் விளைவாக நலிந்தது மக்கள் வாழ்வு! நலமடைந்தனர் நயவஞ்சகர்கள்!

இத்தகைய தீது பயக்கும் சூது வழிகளை—கோணல் கோட்பாடுகளை—குருட்டு நோக்கங்களைக் களைந்து வீச, தகர்த்தெறிய பலர் முன்வந்து பணிபுரிந்தனர், பயன் கண்டனர். சித்தத்தைச் சிறையிலிட விரும்பாத சிந்தனைச்சிற்பிகள், நெளிந்த வாழ்வை நிமிர்த்த விரும்பிய நேர்மையாளர்கள், வீரனை வீணாக்கும் வேண்டாத ஏற்பாடுகளையும்; வீண் தத்துவங்களையும் விரட்டியடிக்கும் அறிவியல் அறிஞர்கள், ஆகியோர் இத்தகைய பணியைத் தழுவிப் பலகாலமாகப் பாடுபட்டனர். புதுமை மலர, புல்லறிவு பொசுங்க வேண்டும். புன்மைச் செயல்கள் கசங்க, புத்தறிவு வளர வேண்டும். மனிதப்பண்பிற்கு மாசு பூசும் மடமை எண்ணங்களின் பிடியிலிருந்து மக்களை மீட்க வேண்டும். வாழ வழி தெரியாத மக்களுக்கு வழிகாட்ட வேண்டும். அவர்களது வாட்டத்தை ஓட்ட வேண்டும். இந்த இலட்சியங்களைக் குறியாகக் கொண்டே, பகுத்தறிவு வாதிகள் பணியாற்றினர்.

பழமையோடு அவர்கள் போரிட்ட பொழுது அவர்கள் பட்ட தொல்லைகள், அடைந்த அல்லல்கள், போர்த்திக் கொண்ட ஆபத்துக்கள், பூசிக்கொண்ட எதிர்ப்புகள், தடவிக்கொண்ட வேதனைகள் எவ்வளவு! அப்பப்ப! எண்ணும் போதே இதயம் திடுக்கிடுகின்றது.

'இருப்பதை இல்லை என்று கூறுகின்றான்—இழிகுணமுடையோன்'

'மதம் மடிய வேண்டுமெனகிறான்—மடையன்'

'பரம்பரையாயிருந்து வரும் பழக்கவழக்கங்களைத் தகர்க்கின்றான்—பாவி;

'சாதிபேதம் சாகவேண்டுமென்கிறான்—சண்டாளன்'

'ஆண்டவனது அற்புத லீலைகளை ஆபாசக் கற்பனை என்கிறான்—ஆணவக்காரன்'

என்று இதுபோல வார்த்தைகள் என்ற வில்லை வளைத்து, வசை அம்புகளை பகுத்தறிவுவாதிகள் மீது எய்தனர் படிக்காத பாமரர்களும், கல்வியறிவு இருந்தும் கருத்தில் தெளிவில்லாத கசடர்களும்! ஊராரின் உறுமல், பெற்றோரின் தூற்றுதல், மதவாதிகளின் மமதை இத்தனைக்குமிடையே பகுத்தறிவாளரின் பணி பவனி வரத் தொடங்கியது. அடுக்கடுக்காக வந்த ஆபத்துக்கள், கூட்டம் கூட்டமாகப் பறந்து வந்த வேதனைகள், பகுத்தறிவு வாதிகளை முன்செல்ல வொட்டாமல் பின்னுக்கு இழுத்தன. ஆனால் அதே சமயத்தில ஆர்வத்தாகமும், கொள்கை வேகமும், பணியின் மீதுள்ள மோகமும், அவர்களை முன்னுக்குத் தள்ளின.

எத்தகைய எண்ணங்களையும், ஏற்பாடுகளையும், அவைகள் மனிதனை மனிதனாக வாழ வைக்கிறதா, அறியாமையை அகற்றுகிறதா, பொல்லாங்கைப் போக்குகிறதா, புதுப்பாதை வகுக்கிறதா என்று ஆராய்ந்து, அறிவுக்கண் கொண்டு அலசி நோக்கி, அவ்வாறு ஆராய்ந்து பெற்ற முடிவுகளைச் சிந்தித்து, தெளிந்து, நிலைகளைந்து செயல் உருவில் அதனைச் சித்தரித்துக் காட்டுவதே பகுத்தறிவாதிகளின் பண்பும் பணியுமாகும். தங்களது உள்ளத்தில் மலர்ந்த உண்மைகளை உலகோர்க்கு ஒலிபரப்ப, பகுத்தறிவுவாதிகள் பேச்சு மேடையையும், பேனாவையும் துணைக்கழைத்துக் கொண்டனர்! அவர்கள் ஆற்றிய அறிவுப்பணிக்கு அவைகள் ஆயுதங்களாகப் பயன்பட்டன. பேனாக்கலப்பைகளின் உதவியைக் கொண்டு, மக்களது மனத்தை உழுதபொழுது ஆளும் வர்க்கத்தினர் அவர்களது பேனாவைப் பிடுங்கினர்! மேடைப்பேச்சு மூலம் மக்களிடையே புதுமைக் கருத்துக்களைப் புகுத்தும் பொழுது பகுத்தறிவாதிகளின் பேச்சுரிமையை சட்டம் என்ற துப்பாக்கியில் அடக்குமுறை என்ற குண்டை வைத்துக் குறிதவறாது சுட்டனர், ஆட்சிப்பீடம் ஏறியோர்!

உலகத்தை வாழவைக்கப் பிறந்த இந்த உத்தமர்களின் சரித ஏடுகளை ஒரு முறை புரட்டிப்

பார்ப்போமேயானால் நிச்சயம் நமது விழிகள் நீர் நிறைந்த தடாகமாக மாறும்! அதே சமயத்தில் குருதி கொதிப்படையவும் செய்யும்! குடியிருந்த வீட்டுக்குக் கொள்ளிவைக்கப்பட்டோர், இருட்டறையில் வைத்துப் பூட்டப்பட்டோர், நாடு கடத்தப்பட்டோர், இன்னும் எத்தனையோ ஆபத்துகளை ஆபரணமாக அணிந்துகொண்டோரை நாம் சரித்திரத்தில் காணலாம். அவர்கள் உயிருடனிருந்தபோழுது, அவர்களை 'நாஸ்திகர்' என்று தூற்றாத நாக்குகள் நானிலத்தில் கிடையாது! 'குற்றவாளி, அவனைக் கூண்டிலேற்று' என்று கூறாத கோல்கொண்டார் இந்தக் குவலயத்தில் கிடையாது. அறிவு விளக்கந் தேடிக்கொள்வதற்காக, பகுத்தறிவுவாதிகள் எவரிடமேனும் எதுபற்றியும் குறுக்குக் கேள்விகள் கேட்டால் அவர்களைக் குற்றவாளிகள் என்றுகூறினார்கள் மக்கள். வாதம் செய்தால் 'வம்பன்' என்றார்கள். வீண் ஏற்பாடுகள் வேண்டாம், வீசி எறியுங்கள் என்றால் 'விதண்டாவாதி' என்று வெறுப்புரையைக் கக்கினார்கள். மக்களுள் எவரேனும் பகுத்தறிவுவாதிகளின் பெயர்களைக் கூறினாலே, கூறியவர்கள்மீது, தங்கள் கண்களில் கனலை அள்ளிக் கொட்டிக்கொண்டு, முகத்தில் கோபத்தை வரவழைத்துக்கொண்டு, பயங்கரப் பார்வையைப் பாய்ச்சினார்கள்! வேறு சிலர் விழிகளில் அலட்சியத்தைத் தூவிக்கொண்டு, முகத்தில், அசடு மிதந்துவழிய, பயத்தோடு பார்த்தனர்!

பகுத்தறிவுவாதிகளில் சிலருக்கு தித்திக்கும் வாழ்வுபெற வசதியிருந்தும், தெவிட்டாத இன்பம் நுகர வகையிருந்தும், சாய்வு நாற்காலியில் ஓய்வாகச் சாய்ந்து கிடக்க சந்தர்ப்பமிருந்தும், சல்லாபியுடன் உல்லாச உரையாடல் நடத்த வழியிருந்தும், அவர்கள் இது போன்ற சில்லறை இன்பங்களிலே காலத்தையும் கருத்தையும் செலவிட விரும்பவில்லை. இன்பம் அவர்களது எதிரே வந்து நின்ற போதிலுங்கூட, அதனை ''விலகி நில்' என்று விரட்டி ஓட்டிவிட்டார்கள். இன்னலுக்கு நல்வரவு கூறி அதனைப் புன்னகையோடு அணைத்துக் கொண்டார்கள்! ஆடம்பரத்தை 'தூ'வென' வெறுத்தொதுக்கினார்கள் ஆற்றலைப் பெரிதென மதித்தார்கள். பணம் 'பொல்லாதது' என்றார்கள். பணிபுரிவது எங்கள் கடமை. அதனைப் பயன்படுத்திக் கொள்வது உங்கள் உரிமை என்று உலகோருக்கு, உரக்கக் கூவினார்கள்.

'பணிபுரியக் கிளம்பிவிட்டோம்' என்றார்கள் பகுத்தறிவு வாதிகள். 'பார்த்துச் செய்யுங்கள்' என்றார்கள் பக்கத்திலுள்ளோர் பயத்தோடு. 'அபாயங்கள் உங்களை மூட்ட வருமே' என்றார்கள் அடுத்துள்ளோர். 'அதுதானே வேண்டியது' என்று அச்சமற்றுக் கூறினார்கள் அறிஞர்கள். 'துப்பாக்கியும், தூக்குமேடையும் உங்கள் உயிரை விலைபேசுமே' என்றார்கள் மக்கள். 'விற்றுவிடத் தயார்' என்றார்கள் வித்தகர்கள்.

உலகம் உருண்டை என்ற உண்மையைக் கூறி, உலுத்தர்களிடம் உதைபட்ட கலிலீயோ, சனாதனிகளை சந்தி சிரிக்கச் செய்த சாக்ரடீஸ், வேதபுத்தகத்தை விற்று விபச்சார விடுதிக்குப்பணம் அளிக்கும் விபரீதத்தைவீழ்த்திய விக்ளிப், மதம் மக்களுக்கோர் அபினி போன்றது என்று மதிமொழி கூறிய மார்க்ஸ், சீர்திருத்தம் என்றால் சீறிவிழும் சிறுமதியாளரின் சிந்தனைக்கு சிக்கலான வேலை கொடுத்த ஜிவிங்லி, இறைவன் பெயரைக் கூறி ஏழையை ஏமாற்றும் இழிகுணத்தை ஒழித்த இங்கர்சால், பேதமையை வீழ்த்தப் பாடுபட்ட பெர்னாட்ஷா, மார்க்கத்துறையில் மறுமலர்ச்சியை உண்டாக்கிய மார்டின் லூதர், அடிமை முறையை அறுத்தெறிந்த அப்ரகாம்லின்கன், வஞ்சக வைதீகர்களின் வறட்டுக் கொள்கையை வீழ்த்திய வால்டேர், ரூஸோ, முதலிய பேரறிஞர்கள்—பகுத்தறிவு வாதிகள் உயர்ந்த ஓவியமாக இன்று உலகத்தாரின் உள்ளத் திரையில் இடம்பெற்று திகழுகிறார்கள். அவர்களது வரலாற்று நூல்கள் பள்ளிப் பாலர்களின் பாடப் புத்தகங்களாகிவிட்டன. அவர்களது தத்துவங்கள் இன்று தரணியை ஆளுகின்றன, அவர்கள் வகுத்த கொள்கைகள், கொண்ட முடிவுகள் மனித சமுதாயத்தின் சட்டங்களாக ஆக்கப்பட்டுவிட்டன.

அன்று வாழ்ந்த பகுத்தறிவு வாதிகளைப்பற்றி, இன்று பட்டிதொட்டிமுதல், பாராளுமன்றம் வரைப் பேசக் கேட்கிறோம். இத்தகைய உலகப் பேரறிஞர்கள் இன்று உயிருடனில்லை! அவர்களைக்காலம் கல்லறைக்கு இழுத்துச் சென்றுவிட்டது! அவர்களது உடல் பிணமாகிப் போனதெனினும் அன்னாரது கொள்கைகள் பிணமாகவில்லை! அவைகள் உயிருடன் உலவிக்கொண்டிருக்கின்றன உலகின் பல்வேறு பாகங்களில்! வானில் வட்டமிடும் விமானமாக, ஓடும் புகைவண்டியாக, நீர்மூழ்கிக் கப்பலாக, பேசும்படமாக, ஒருவர் பேசுவதை உடனே அப்படியே மற்றவரது காதில் கொண்டு கொட்டும் வானொலியாக இன்னும் பல பல உருவங்களாக—சாதனங்களாக பகுத்தறிவு வாதிகளின் பணியின் விளைவு நம கண் எதிரே காட்சி தந்து நிற்கிறது!

தெளிந்த சிந்தனை, களங்கமில்லாத கருத்து, ஆபத்தைக் கண்டு வளையாத அஞ்சாநெஞ்சம், தன்னலத்தை வேரறுத்த மனப்பண்பு, தன்மானத்தைத் தன் உயிரென

(20-ம் பக்கம் பார்க்க)

திராவிடர் டைரி—1951

மிக முக்கிய அறிவிப்பு

டைரி அச்சிடப்படுவதற்குத் தேவையான காகிதத்தின் விலை திடீரென்று ஒன்றுக்கு இரண்டு மடங்காக உயர்ந்துவிட்ட காரணத்தால், டைரி, இரண்டாம் பதிப்பு அச்சிடப்படவில்லை. முதற் பதிப்புப் பிரதிகள் முற்றிலும் செலவாகிவிட்டன. எனவே இனி, டைரிக்காக யாரும் பணம் அனுப்பாமல் இருக்கும்படிப் பணிவுடன் வேண்டிக் கொள்கிறோம்.

இன்பத் திராவிடமே நம் இதய கீதம்!

★

பிரிவோம் பிரிவோம் தனி நாடு அமைப்போம்!

★

நம்நாடு மாற்றாரின் வேட்டைக்காடான விபரீதம்!

நாஞ்சில் மாநாட்டு வரவேற்புரை.

★

சென்ற வாரம் நாகர்கோயிலில சிறப்புற நடைபெற்ற நாஞ்சில் மாவட்ட தி. மு. க. மாநாட்டின் வரவேற்புத் தலைவர் **தோழர் வி. எம். ஜான்** அவர்கள் ஆற்றிய வரவேற்புப் பேருரை :—

தோழர்களே!

உங்களனைவரையும் வரவேற்புக் குழுவின் சார்பில், அதன் தலைவன் என்ற முறையில் முதன் முதலில் வரவேற்றுக் கொள்கிறேன். அம் மாபெரும் பொறுப்பை எனக்களித்த மாநாட்டுக் குழுவினருக்கு என் அன்பு கலந்த வணக்கமும் நன்றியும் உரியவாகுக.

இங்கே பெருமளவுக்குக் குழுமியிருக்கும் உங்களிடையே துள்ளிவிளையாடும் மகிழ்ச்சிப் பேரலையை என்னால் பார்க்க முடிகிறது. அதன் ஆர்ப்பரிப்பிலே நானும் ஒருவனாகிவிட்டேன்; ஆனந்தம் கொள்கிறேன்.

நான் நினைக்கிறேன்—இங்கே கூடியுள்ள தோழர்களில் பெரும்பாலானவர்கள் நாஞ்சித் தமிழகத்துக்காப்பாற் பட்டவர்கள். மலையாளப் பகுதியிலேயுள்ளவர்கள். நாஞ்சில் நாட்டவர்கள் அன்று. எனவே மொத்தமாகவும் தனித்தனியாகவும் உங்களனைவரையும் மீண்டும் ஒரு முறை வரவேற்பதற்கு முன்னால், நமது மாநாடு நடைபெறும் நாஞ்சில் மாவட்டத்தைப்பற்றி ஒரு சில வார்த்தைகள் கூற ஆசைப்படுகிறேன்.

ஏறத்தாழ பத்து இலட்சம் தமிழர்களை ஜனத்தொகையாகக் கொண்ட நாடு நாஞ்சில் நாடு. இங்கு வாழும் மக்கள் அனைவரும் தமிழர்களே. அவர்கள் இல்லங்கள் தமிழ் பயில் மன்றம்; உள்ளங்கள் தமிழ் வளர் சோலை. இந்தியத் துணைக்கண்டத்தின் பூங்கா என்பார்கள் இயற்கை எழில் எறிக்கும் திருவாங்கூரை! ஆனால் அத் திருவாங்கூரின் நெற்களஞ்சியம் நாஞ்சில் நாடென்பதை ஆட்சிப் பீடமறியும்! வளம் நிறைந்த நாஞ்சி, வகையான கலாச்சாரத்தின் பெட்டகம்! மக்களிலே நூற்றுக்குத் தொண்ணூறுக்கு மேல் படித்தவர்கள்! விஷயந் தெரிந்தவர்கள்! நாகரிகத்தின் வளர்ப்புத் தொட்டில் லெமூரியா என்றால் உலகிற்கே அந்தப் பாலை அருள் சுரந் தூட்டிய பெருமைக்காக நாஞ்சில் நாடு மார்தட்டிக்கொள்ள முடியும்! இடப்பற்று மட்டுமல்ல இதற்குக் காரணம்-இனப்பற்றுங் கூட! வரலாறு போதிப்பதும் அதுதான்.

கலாச்சார, கல்வி வளர்ச்சிக்கு இந்த நாட்டின் இயற்கை நிலையும் மாபெரும் பங்கு வகிக்கிறது என்பதை நான் கூறியாக வேண்டும். எதிர்காலத் திராவிடம் தனித்து வாழ முடியுமா பொருட்டுறையில் என்பார்க்கு, நாஞ்சில் நாட்டின் இயற்கை வளம் பெருமளவுக்குப பதில் கூறும் என்று நான் கருதுகிறேன். உலகை ஆட்டிப்படைக்கும் அணுக்குண்டு, அதைச் செய்வதற்குத் தேவைப்படும் தோரியம், சிலிகன், இல்மனைட் இந்த நாட்டிலே ஏராளம்! பள்ளிவாசல் நீர் வீழ்ச்சி; உருவாகிவரும் பெருஞ்சாணி அணைக்கட்டு, மிக விரைவில் நாஞ்சில் நாட்டை மின்சார மயமாக்கப்போகின்றன! மக்களின் வாழ்க்கைத் தேவைக் கேற்ற நெல்! அது நாஞ்சிநாட்டின் தனிப்பெருஞ் சொத்து. "ஏரில்லா வீடில்லை ஏரில் தொழுவில்லை போரில்லாப் போன கள்

(11-ம் பக்கம் பார்க்க)

போர்வாள்

[திராவிடர் வார வெளியீடு]

வாள் 4	திருவள்ளுவர் ஆண்டு 1981 மார்கழி 22 6—1—51 சனிக்கிழமை	வீச்சு 19

நாஞ்சில் மாநாடு

——[::]——

"இதுகளாவது ஓர் இயக்கத்தை நடத்துவதாவது!"

"பிஞ்சிலே பழுத்ததுகள்!"

"பணி புரியும் பக்குவம் அற்றவர்கள்!"

"வெற்றுச் சொல் வீரர்கள்!"

நேற்று வந்து இன்று பேச்சாளரானதுகள்!"

"தொடை நடுங்கிகள்"

"பத்தே நாளில் புசுபுசுத்துவிடும் இதுகள் தொடங்கும் இயக்கம்"

"மாதம் ஒன்று முடியட்டும் சொல்கிறேன் — மூலையில் முடங்கப் போகிறார்கள் பார் இப் பகானு பாவர்கள்!"

ஆம்! துவேஷம் எனும் கடு விஷத்தில் தோய்த்தெடுத்த இத்தகு சொற்களைத்தான் சூதுமதியினர் பலர் சரமாரியாக நம்மீது வீசினர் நாம், நம் இதயகீதமென விளங்கும் திராவிட முன்னேற்றக் கழகத்தைத் தொடக்கியபோது!

எதிர்பார்த்ததற்கு எதிரிடையாக, வஞ்சக எண்ணங் கொண்டோர் கண்டு அஞ்சும்படியாக, 'அழிந்து படுவோம் நாம்' என்ற அவர்கள் ஆவல் தரைமட்டும் ஆகும்படியாக, பலரும் பார்த்து வியக்கும்படியாக, நாம் வளர்ந்து விட்டோம். சென்னையிலே துவக்கிய முழக்கம் தமிழ் நாடெங்கும் எதிரொலிக்கத் தொடங்கியது. அதன் பலன் பல்லாயிரவர் நம் கழக உறுப்பினராயினர். பட்டிதொட்டி நகரம் எங்கும் கிளைக் கழகங்கள். மாவட்டந்தோறும் மாநாடுகள்! அவற்றிற்கு பெருவாரியான மக்கள் ஆதரவு! நாட்டின் மூலை முடுக்குகளில் எல்லாம் கூட்டங்கள்! அங்கு இயக்க முன்னணி வீரர்களின் அறிவுப் பிரசாரத்தை, நாட்டு நிலையின் நல் விளக்கத்தை, எதிர்காலத் திட்டத்தைக் கேட்க மக்கள் திரள்!

சூழ்ச்சி மனம் படைத்தோர் ஆத்திரங் கொண்டனர். அவர்கள் தொகை தேயத் தேய, நாம் வளர வளர, அவர்கள் ஆத்திரம் அதிகமாயிற்று, சீறிடும் பாம்பாயினர், விஷத்தைக் கக்கத் தொடங்கினர். "வெற்றுச்சொல் வீரர்கள்தான் இவர்கள். திட்டமேதும் கிடையாது இவர்களிடம். செயலாற்றும் திறன் படைத்தவரல்ல" எனக் கதறினர். இத்தகைய வீண் புரட்டர்களுக்கு—வஞ்சகத்தின், சூழ்ச்சியின், பொறாமையின் உருவகங்களுக்கு—சரியான சவுக்கடி தந்தது கோவில்பட்டி மாநாடு! அதன் விளைவு டெல்லி மந்திரிகள் திவாகருக்கு, ஆச்சாரியாருக்குக் கருப்புக் கொடி! 'கருங்கடல்' குமுறி எழுந்து அலைமோத எக்காளமிட்டது! ஆம்! சென்னை மக்கள், "வீரமரபினர் யாம்! செயலாற்றும் தீரர்யாம் எனக்காட்டினர்! வெற்றி! வெற்றி!! மாபெரும் வெற்றி!!!" என்றனர் கண்டோரனைவரும்.

ஆத்திரப் பட்டோர் ஆயாசமடைந்தனர்! "அழிந்தொழிய மாட்டார்களா, வராதா இவர்களுக்கு சாவு" என் 'வரம்' கிடந்தோர் வாய் பொத்தி, மூக்கில் விரல் வைத்து, திகைத்து நின்றனர். தம் கட்டுக் கதைகள் பொட்டுப் பொசுங்கிப் போனதும், சந்து பொந்து தேடிற்று இச்சமூக்கர் கூட்டம்.

"திராவிட நாடாவது மண்ணாவது? வீண், காட்டுக கூச்சல்! ஆந்திரர்கள் ஆதரிக்கிறார்களா? கன்னடியர் காது சாய்க்கின்றனரா? கேரளர்கள் கேட்பதில்லையே இவர்கள் பேச்சை!" என்ற ஒரு புதிய பாணத்தைக் கிளப்பின சில புல்லுருவிகள்.

புதிய பாணத்தைப் புஸ்வாணமாக்கிவிட்டது சென்ற வாரம் நடைபெற்ற நாஞ்சில் நாட்டு தி. மு. க. மாநாடு!

நாஞ்சில் நாடு, திருவாங்கூர்—கொச்சி கூட்டாட்சியிலுள்ள தமிழ்ப் பகுதி. நாஞ்சில் மக்கள், தங்களைச் சேர்ந்த மக்களோடு—தமிழ் மக்களோடு—கூடி வாழ வேண்டுமென்ற ஆசையோடு, "நாஞ்சில் நாடு தமிழ்நாட்டுடன் சேரவேண்டும்" என்ற கோரிக்கையைக் கிளப்பியுள்ளவர்கள். அவர்களது அக்கோரிக்கையை நமது கழகமும் ஆதரிக்கிறது, நம் எதிர்ப்புப் பாசறையில் உள்ள தோழர்கள் பலரும் ஆதரிக்கின்றனர். அந்தப் பாசறைத் தோழர்களுக்கு, 'நாஞ்சில் மாநாடு' தக்கதொரு கேள்வியை விடுத்திருக்கிறது.

"நாஞ்சில் மக்களாகிய நாங்கள், தமிழ் நாட்டுடன் சேர்ந்து வாழ வேண்டுமென்பது மட்டுமல்ல எங்கள் விருப்பம்! வடநாட்டு ஆதிபத்யத்திலிருந்துவிடுபட்ட சுயேச்சைத் திராவிடமே எங்கள் இலட்சியபுரி!" என்பதே நாஞ்சில் மக்கள் வெளியுலகிற்கு அறிவித்துள்ள இதயகீதம்!

நாஞ்சில் மாநாட்டைச் சிறப்புறச் செய்தவர்கள் தமிழர்கள் மட்டுமல்ல. நம் கழகத்தின் சீர்திருத்த பிரசாரத்தை, நாம் ஆற்றிவரும் நற்பணியின் பட்டியலை, நம் எதிர்காலத்திட்டத்தைக்கேட்கவந்தோர், மாநாட்டில் கலந்து கொண்டு இன்புற்றோர், பயன் பெற்றோர்களில் பலர், மிகப்பலர் மலையாளத் தோழர்கள். மாநாட்டைக் கூட்டுவதற்குப் பணிபுரிந்தோரில்கூட பலர் மலையாளத் தோழர்கள். ஆம்! கேரளம் நம் பக்கம் திரும்பத் தொடங்கி விட்டது! கேரளத்திற்கும் தமிழகத்திற்கும் இடையே இணைப்புச் சங்கிலியாக அமைந்துள்ள நாஞ்சில்நாட்டில் எழுப்பப்

(2-ம் பக்கம் பார்க்க)

(9-ம் பக்கத் தொடர்ச்சி)

யில்லை"—என்ற கே. என். சிவராஜ் பிள்ளையவர்களின் பாடல், உண்மைப் படப்பிடிப்பு. தற்குறிப்பேற்றமோ, உயர்வு நவிற்சியோ அல்ல.

நாஞ்சில் நாடு தமிழ்க் கலைத் துறையின் முற்போக்கிற்குப் பெரும் பங்கைச் செய்துள்ளதை நீங்கள் அறிவீர்கள்!

"தக்கணமும் அதிற்சிறந்த திராவிட நற்றிருநாடும்" என்ற நாட்டு வணக்கம் பாடிய மனோன்மணிச் சுந்தரனாரை நாஞ்சித் தமிழகம் உலகிற்கு அளித்தது! நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரம், இந்நாட்டு இளங்கோ வடிகளின் கை வண்ணத்திலே உருவான வாடா மலர். பாவலரைப் பார்த்தோம்! இலக்கிய மேதைகளை நாஞ்சி நாடு வெளியுலகிற்கு அளித்தது! கலைவாணர்கள் இந்த நாட்டினின்றும் புறபட்டவர்கள். இசைவாணர்கள் பெருகிக் கொண்டேயுள்ளனர்! இந்தியத் துணைக்கண்டத்தின் அரசியல் மூளைபலம் தென்னாட்டிலேதானிருக்கிறது என்பவர்கள், நாஞ்சி நாட்டையும் சேர்த்தே கூறி இருக்கிறார்கள்! புத்தேரியிலே-கவிக்குயில் தேசிக விநாயகம் இன்ப நாதம் பொழிகிறது! ஏன், சென்னை ஆட்சியாளர்கரின் பொருளாதார மூளை நாஞ்சி நாட்டினின்றும் ஏற்றுமதி செய்யப்பட்ட நாஞ்சில் நாட்டில்தான் நாம் திராவிட முன்னேற்றக் கழக மாநாடு கூடியுள்ளோம்,

உலகத்தின் மூலைமுடுக்குகளிலெல்லாம் உரிமை முழக்கம் பெருகிவரும் நேரத்தில்-சீனா சிவப்பாகிவிட்ட நாட்களில்-பர்மா தனியுரிமையோடு முன்னேறும் வேளையில்-இந்தோனேஷியா மண்ணில விடுதலை கால்கோளூன்றிவிட்ட சந்தர்பத்தில்-கொரியாவின் தன்னுரிமைப் போராட்டம், இரத்த வெள்ளத்தையும், எலும்புக் குவியல்களையும் தாண்டி வேக வகமாகப் பாவுகையில்—எகிப்து நாட்டை விட்டு, வெள்ளைத் துருப்புக்களை வெளியேறுங்கள் என்று எகிப்தியர்கள் முழங்குகையில்—பிராங்கோவின் கொடுங்கோலாட்சிக்கு முற்றுப் புள்ளி வைக்க ஸ்பானிய மக்கள் கங்கணங்கட்டுகையில்—தென்னாப்பிரிக்க மனு மலானின் காட்டுமிராண்டித்தனமான ஏதேச்சாதிகார ஆட்சியை எதிர்த்து அங்குவாழ் இந்தியர் போர்ப் பிரகடனம் செய்கையில்—மன்னர் ஆட்சியை எதிர்த்து நேப்பாள மக்கள் தமுறி நிற்கையில்-எல்லாவற்றிற்கும் மும்முரமாக, உலகமே இருபெரும் பிரிவுகளாகப் பிரிந்து, முறிந்துவிழும் முதலாளித்துவத்திற்கு முட்டுக் கொடுக்கும் முதலாளித்துவ அமெரிக்கா ஒருபுறமும்-சமதர்மப் பூங்காவாகப் பாரை மாற்ற சோவியத் யூனியன் மறுபுறமும் நின்று போர்க்களம் விரையுகையில்—உலகையாட்டும் அணுக் குண்டைத்தடையவார்ஸாவிலே சமாதான மாநாடு நடைபெறுகையில்தான், நாமும் நமது உரிமைக் குரலைக் கிளப்ப, அது, பாசிசவெறியர்களின் செவியைத் துளைக்க, துருப்பிடித்த மூளையைச் செப்பனிட மாநாட்டிலே கூடியிருக்கிறோம்-

நல்ல நேரத்திலே கூடியிருக்கிறோம்! சந்தர்ப்பம் நமது போராட்ட வேகத்தை வலுப்படுத்திய வண்ணமுள்ளது! 1775-ல் நடந்த அமெரிக்க சுதந்திரப் போராட்டம், 1,89 பிரெஞ்சுப் புரட்சிக்கு, வித்திட்டு. வெற்றி புரிக்கு அழைத்துச் செல்லுமானால், இவ்விரண்டு போராட்டங்களும் ஐரிஷ் மக்களின் விடுதலை வேட்கையைக் கிளப்பிவிடுமானால், செஞ்சீனாவின் வரலாறு—மாசேதுங்கின் வாழ்க்கை ஓவியம், நமக்கேன் ஒரு பாடமாக அமைதல் கூடாது? இந்தக் கேள்விக் குறிதான் மாநாடு! அதற்குள்ள பதிலில்தான் நமது எதிர்காலம் அமையவிருக்கிறது.

தோழர்களே! நாஞ்சில் மாவட்டம், ஏறத்தாழ இருபது, முப்பது ஆண்டுகளாகக் கழகக் கருத்துக்களைப் பரப்பிடும் பணியில் ஈடுபட்டிருந்தது பல்வேறு உருவில், பல்வேறு வகையில்! சமூகத்தைச் செல்லரித்த பீடைகளைத் தகர்த்தெறியப் பாடுபட்ட சுயமரியாதை இயக்கத்தின் வளர்ச்சியைத் தொடர்ந்து, சேலம் செப்பனிட்ட பாதை வழி நடந்து, பாதி தூரம் வந்ததும், எதேச்சாதிகாரம், பிடிவாதம் என்னும் கோடாரியைக் கையிலே தாங்கி இலட்சியச் செடியை வெட்டும் பயங்கரமான நிலைமை கிளம்பியதைக் கண்டோம். நல்லபாதையிலே நச்சரவமா? மணிமண்டபத்திலும் விஷஜந்துக்களா? ஏமாற்றமும், வருத்தமும் ஒன்றையொன்று கவ்விப்பிடிக்க, பெருமுயற்சிக்குப் பிறகும் ஏற்பட்ட விபரீத நிலை கண்டு, உடைந்த உள்ளத்தோடு, அதே இலட்சிய புரியை நோக்கி, ஆனால் திக்கு வேறு பார்த்து நடக்கலானோம்! பாதை செப்பனிடப்பட்டதும், பொருத்தமானதும், ஜனநாயக மலர் பூத்துக் குலுங்குவதுமாக இருக்கக் கண்டு மகிழ்கிறோம்! செல்லுகின்ற பாதை வழி, ஆர்ப்பாட்டப் போர்ப்பாட்டைப் பாடி முன்னேறிய வண்ணம் உள்ளோம். அண்ணா அவர்கள் கூறிய "வெற்றி தூரத்தில் இல்லை: கண்ணுக்குத் தெரிகிறது" என்ற வார்த்தைகள் தம் மெய்யுருவங்காட்டிப் புன்னகை புரிவதைப் பார்க்கிறோம்.

நாஞ்சில் மாவட்டத்தில், முன்னேற்றக் கழகம் ஆரம்பித்து, ஆண்டு ஒன்றாகிறது! இதற்கிடையே பத்து கிளைக் கழகங்களுக்கு மேல் கண்டிருக்கிறோம். வீரநாராயணமங்கலம், அழகனுபுரம், தோப்பூர். வடசேரி. கிருஷ்ணன்கோவில், கோட்டாறு, இரணியல், பாலராமபுரம். நாகர்கோவில் போன்ற இடங்களிலே கழகம் பணி புரிகிறது. முன்னேற்றக் கழகத்தின் கொடிகள் பட்டொளி வீசிப் பறந்த வண்ணமுள்ளன. திருவனந்தபுரத்திலே திராவிட முன்னேற்றக் கழகம் பணிபுரிகிறது. அங்குள்ள தோழர்களின் உள்ளங்களெல்லாம் கட்சிக்கோட்டை! மலையாளியும்—தமிழனும் கைகோர்க்கும் பாலராமபுரத்தை நமது கட்சிப் பிரச்சாரத்தின் மலையாளப் பகுதியின் தொடங்கு மையாக மாற்றிவிட்டோம். "மலையாளி மன மொவ்வுகிறுனு திராவிட நாட்டை அமைக்க" என்னும் வெத்துக் குரல் கிளப்பும் அரசியல் மோசக்காரர்களுக்கு நாஞ்சில் நாட்ட திராவிட முன்னேற்றக் கழகம் சவால் விடுக்கிறது! அறைகூவல் விடுக்கிறோம்! ஆந்திரத் தோழர்கள்—கன்னடிய நண்பர்கள் எங்களைப் பின்பற்றும் நாள் வெகுதொலைவில் இல்லை.

நண்பர்களே! நாஞ்சில் நாட்டின் அரசியல் கட்சிகளைப் பற்றிய வரலாறு நீங்கள் நல்லமுறையிலே தெரிந்திருப்பீர்கள் என்று நான் மனப்பூர்வமாக ஒத்துக்கொள்ள இயலாதவனாய் இருக்கிறேன். ஆக இந்நாட்டின் அரசியல் மைதானத்திற்கு உங்களை அழைக்கிறேன் கட்சிக் காட்சிகளைக்காண. திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்தவரை இங்கு நிலவும் அரசியல் கட்சிகளை எந்தக் கண்ணோட்டத்தோடு கவனிக்கிறது என்பதை நான் சொல்லியாக வேண்டும். அதற்கு முன்னால் முன்னேற்றக் கழக வாயிலாக பொதுமக்களுக்கு நாம் என்ன கூறுகிறோம் என்பதை விளக்குதல் மிகமிகத் தேவை என்பது என் அபிப்பிராயம்.

மொழி, வழி, விழி இந்த அடிப்படையை முதலாக வைத்து இந்த நாட்டின் பழங்குடி மக்களாகிய நாம் வரலாற்றுச் சுவடிப்படி திராவிடர்கள் என்பதும் நமக்கென்று பண்டு பண்டே தனிநாடு இருந்தது என்பதும், ஆட்டும் சுட்டு விரல் கொண்டே வையத்தை ஆட்டுகின்ற அளவிற்கு வல்லமை பெற்றிருந்தோம் என்பதும், சமுதாய பொருளாதார அரசியல் துறைகளில் வகையாக வாழ்ந்தோம் என்பதும், ஆனால் அதே இனம் இன்று சமுதாயத் துறையில்,

"தேன் சுரக்கப் பேசி இந்து
சமுகத்தைத் தின்னுதற்கு
வான் சுரரை விட்டு வந்த
பூசுரர்களால்"

அடக்கப்பட்டோம் என்பதும், செல்வச் செழிப்பிலே இறுமாந்த நாம் வடநாட்டு மார்வாடிகளால் இன்று சூறையாடப்படுகிறோம் என்பதும், அரசியல் துறையிலே கொத்தடிமைகளாய் வடக்கு நோக்கித் தண்டனிடுகின்ற இழி நிலையைப் பெற்றவர்களாய் இருப்பதும் நமக்குத் தெரிகிறது.

வாழ்ந்தவர்கள் வீழ்ந்து போனோம். நம் நாடு மாற்றார்தம் வேட்டைக் காடாயிற்று. நமது கலாச்சாரம் கேலிக்குரியதாக்கப் பட்டது. நமது பொருளாதாரம் நம் நாட்டு மக்களை வேற்று நாட்டிற்குக் கூலிகளாக அனுப்புகின்ற அளவுக்கு வறண்ட பாலைவனமாயிற்று. ஆச்சரியம் எனினும் உண்மை. நடக்க முடியாதது எனினும் நடக்கிறது! இந்த நிலைமைக்கு மாற்றுத் தேடுவதுதான் நம்மவர் இலட்சியம். தமிழனும், தெலுங்கனும், கன்னடியனும் மலையாளியும் ஒரு தாய் வயிற்று மக்கள்; ஒரு தாயின் முலைப்பாலை உண்டு வளர்ந்தவர்கள், அவர்களுக்குள்ளே மாறுபாடு முரண்பாடு எழுவது இயற்கைக்கு மாறுபட்டது; வரலாற்றுப்படி ஓரினத்தவர்கள். இது தான் திராவிட முன்னேற்றக் கழகத்தின் அடிப்படை உரிமை முழக்கம்.

இங்குள்ள அரசியல் கட்சிகளில் மிக முக்கியமான கட்சியாகக் கருதப்படுவது திருவிதாங்கூர் தமிழ்நாட்டுக் காங்கிரஸ். அவர்களின் அரசியல் நோக்கம் நமது விளக்கத்தைத் தேவைப்படுகிறது. தமிழ்நாட்டுக் காங்கிரஸ் இன்று பொது மக்களிடம் கூறுவதென்ன? அதன் அரசியல் இலட்சியந்தான் என்ன? அது ஒரு சிக்கல் நிறைந்த மாபெரும் புதிர்! மாறிச்சுழலும் நிலையற்ற கருத்துக் கோர்வைகளின், அமைப்பு முறைகளின், நிலைக்களனை மாறிவிட்டது, தமிழ்நாட்டுக் காங்கிரஸ். அதன் தேர்தல் பிரகடனம் மக்களுக்குப் பேசியது இதுதான்.

'திருவிதாங்கூரில் தமிழ் மாகாணம் அமைப்பது சமஸ்தானம் உட்பட மொழிவழி மாகாணம் ஏற்படும்போது, இந்தத் தமிழ் மாகாணத்தைத் தாய்த் தமிழகத்துடன் சேர்த்து ஒரு புதிய தமிழகத்தை அமைப்பது",

தனி மாகாணம் முதல் கோரிக்கை. இரண்டாவது, திருவாங்கூர்த் தமிழகத்தைப் பிரித்துத் தாய்த் தமிழகத்தோடு இணைப்பது. பின்னால், முதலிரண்டு பிரச்சனைகளும்

நடுக் காட்டிலே கொண்டு போய்க் கண்ணைக் கட்டி நிறுத்தப்பட்டன. மூன்றாவதாக வேறோர் புதுக் கோரிக்கை உருவாயிற்று மேலிடத்தின் அழுத்தமும் காங்கிரஸ் தலைவர்களின் அலட்சிய மனப்பான்மையும் இதற்குகாரணமாக அமைந்தன. அந்தக் காரணத்திற்காகத்தான் கருத்தை மூன்று தடவை மாற்றி யிருக்கிறார்கள். கவலையில்லை! காலப் பெருவெள்ளம் இக் கருத்தையும் அடித்துக் கொண்டுபோய் இனி எக்கருத்தைக் கொண்டுவருமோ? நாம் அறியோம்!

மொழிவழி மாகாணக் கோரிக்கையைக் காங்கிரஸ் ஆதரித்தது. மாபெரும் மாநாடுகளிலே தீர்மானங்கள் நிறைவேற்றினார்கள். ஆனால் அடிமை இந்தியாவிலே நிறைவேற்றப் பட்ட இத் தீர்மானங்கள் சுதந்திர இந்தியாவில் செல்லாக் காசுகளாக ஆக்கப்பட்டன.

"அந்தக் கோரிக்கைகள் இப்பொழுது கவனிக்கப்பட வேண்டியனவல்ல" "மொழிவழிமாகாணம் பைத்தியம்" இது சுதந்திர இந்தியாவின் தனிப்பெருந் தலைவர்களின் தீர்ப்பு தீர்ப்பா அது! அடிப்படை உரிமையின் மீது எழுப்பிய கேள்வி! திருவாங்கூருக்கு விஜயம் செய்தார், நேரு அண்மையில்! ஸ்டேடியம் மைதானத்தில் பண்டிதர் பேசுகிறார் "திருவிதாங்கூரில் தனி மாகாணம் கோருகிறவர்கள் முட்டாள்கள்" பண்டிதர் வெளிப்படுத்திய இந்தத் தீர்ப்புரை வெந்த புண்ணிலே ஓர் வேல்! ஒரு காலத்தில் தமிழ்நாடு காங்கிரஸ் கொண்டிருந்த அரசியல கருத்தை இன்றுங்கலவிடும் கருத்தாகக் கொண்டு அதற்குப்பதிலிறுத்தார். பதில் அல்ல தமிழர் தம் ஜீவாதார உரிமையைப் பண்டிதர் பரிகசித்தார். தமிழ் நாடுகாங்கிரசின் அடிப்படை இலட்சியத்தை எள்ளி நகையாடினார். அதற்கும் தமிழ் நாட்டுக் காங்கிரஸ் தன் மௌனப்பட்டியலையே தயாரித்தது.

தமிழ்நாடு காங்கிரஸ் இங்கு வாழும் தமிழர்கள் சுமார் பதினைந்து இலட்சம் பேர்களின் ஏகோபித்த அரசியல் ஸ்தாபனம் என்று கூறப்பட்டது. மொழிகாக்கும் பெரும் பணிக்கு அந்த ஸ்தாபனம் செய்தபெரும் பங்கு இங்குள்ள பள்ளிகளில் இந்தி நுழைவுதற்கு இடமளிக்கத் தவறவில்லை. அந்தக் கொழுந்துவிட்டெரியும் பிரச்சனையைக் கவனிக்கும் நோக்கோ நேரமோகூட அவர்களுக்கு இருந்ததில்லை! தமிழர்தம் ஆற்றலை மற்றவர் சோதிக்கும் கட்டத்திலெல்லாம் தமிழ்நாடு காங்கிரஸ் அதற்குச் சலுகையும், சந்தர்ப்பமும் செய்து கொடுத்ததே தவிர, எதிராற்றலைக் காட்டவில்லை! காட்டமுடியவில்லை.

நமது கட்சியைப் பொறுத்தவரை மொழிவழி மாகாணம் நமது உயிர்க் கோட்பாடு; எனவே நமது மனப்பூர்வமான ஆதரவு அதற்கு உரியதாகுகிறது.

பிரிகின்ற மொழிவழி மாகாணங்களின் மொழிவழி அவகாசத்தை நாங்கள் வலியுறுத்துகிறோம். மலையாள ஆட்சி தமிழ் ஆட்சியைச் சுரண்ட நினைத்தால் நாஞ்சில் திராவிட முன்னேற்றக் கழகம் அந்த மொழி பேசும் மக்களின் அடிப்படையுரிமையைக் காக்கக் களத்திலே குதிக்கும் என்பதைப் பிரகடனப்படுத்த ஆசைப்படுகிறேன். மொழி ஆதிக்கம், சுரண்டல் முறை எங்கு, எப்படித் தாண்டவம் ஆடினாலும் அதை நாங்கள் கண்டிக்கத் தவறியதில்லை, தவறமாட்டோம். இதுதான் எங்கள் கழகத்தின் லட்சியம்.

இன்றைய உலக அமைப்பு, அதிலே ஏற்பட்டுள்ள இருக்கிறவன்-இல்லாதவன் கோளாறு, தொழிலாளி—முதலாளி தகராறு, இவைகளுக்குத் திராவிட முன்னேற்றக் கழகம் கொடுக்கும் விளக்கவுரை இதுதான். திராவிட முன்னேற்றக் கழகம் தொழிலாளர்தம் பாசறை. அவர்களின் நலனுக்காக ஏற்படுத்தப்பட்ட அமைப்புமுறை. உழைக்கிறவனின் உரிமைக் குரலை முன்னேற்றக் கழகம் தனது அரசியல் பேரிகையாகக் கொண்டிருக்கிறது. திராவிடர்கள் பாட்டாளிகள். வேதனை வாழ்வு நடத்துபவர்கள். வறுமையோடு மல்லிடுகிறார்கள். பட்டினிக்கு அவர்கள் குடும்பம் இரையாகிறது. உடைந்த உள்ளமும் தேய்ந்துபோன வாழ்வும் அவர்களின் நண்பர்கள்! வேதனைக் கொட்டிலிலே தூக்கி எறியப்பட்டு இன்றைய மாறுபட்ட சமுதாய அமைப்பால் உழைக்கும் விவசாயி, தொழில் சாலையினின்றும் கிளம்பும் புகை மண்டலத்தோடு தனது பெருமூச்சைக்கலக்கவிடும்பாட்டாளி, ஊர் வாழ ஆடை நெய்து தன் மானத்தை மறைக்கக் கந்தை கூட இன்றி அலைந்துறும் நெசவாளி, 'இன்னும் எண்ணற்ற பேர்கள்; வாழ்க்கையைப் பாழாக்கியவர்கள். அவர்களின் வாழ்வு வளர்ச்சியைக் கோரும், அதற்காகப் பாடுபடும் கழகம் நமது கழகம். அரசியல்

இடைப்பாடியில்
பொங்கல்விழாப்
பொதுக்கூட்டம்
தி. மு. கழகச்சார்பில்
14-1-51
பேச்சாளர்கள்:—
N. ஜீவரத்தினம்
பு. ஆ. அருணகிரி.

சூதாட்டக்காரர்கள், சுயநலத்தை முதலாக வைத்து தொழிலாளி வர்க்கத்தைச் சூறையாடக் கட்சி வலைகளை வீசிய வண்ணம் இருக்கின்றனர். அந்த வலையிலே வீழ்ந்து வல்லமையைப் பாழ்படுத்தாமல் இருக்க தொழிலாளி வர்க்கத்தை இந்த மாநாடு மூலம் நான் கேட்டுக்கொள்கிறேன்.

வர்ணாஸ்ரமம் என்னும் சூது நிறைந்த சுரண்டல் இயந்திரத்திற்கு இரையாகி அறைபட்டு இரத்தம் சொட்டச் சொட்ட வேதனை அனுபவிக்கும் தாழ்த்தப்பட்ட சமூகத்தினருக்கு, ஒரு சில வார்த்தைகள் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். கடந்த பல ஆண்டுகளாக தாழ்த்தப்பட்ட சமூகத்தினரின் நல உரிமைச் சங்கமாக அமைந்திருந்தது காங்கிரஸ் ஒன்றே என்று பிரசாரப்படுத்தப்பட்டது. அந்த சமூகத்திற்காக காங்கிரஸ் செய்தது என்ன? இந்தக் கேள்விக்கு காங்கிரசின் கடந்தகால வரலாற்றுப் பக்கங்கள் வெற்றிடத்தைக் காட்ட முடியுமே தவிர, ஆக்கப்பட்டியலைக் காட்ட அதனால் முடியாது.

இந்து மதத்தின் வெங்கொடுமையை உணர்ந்து அந்தப் பயங்கரச் சூழ்நிலையிலிருந்து தம்மை விடுவித்துக் கொண்டு வெளியேறி, மகம் மாறிய மக்கள் இன்று இரண்டும் கெட்டான் சூழ்நிலையில், திரிசங்கு சொர்க்கத்தில் தொங்கிய வண்ணமுள்ளனர். அவர்களின் வாழ்வு பந்தாடப் படுகிறது! ஒரு மதத்திற்கும் இன்னொரு மதத்திற்கும் உள்ள இடைவெளி தூரத்தை அளந்து, எட்டிப் பிடித்தும், திரும்பியும் அவர்கள் வாழ்கின்றனர்! எனவே அவர்களின் வாழ்வு தேங்கிய குட்டையாக இருப்பதைத்தான் நம்மால் காண முடிகிறது! ஆண்டவன் கைவிட்ட ஓர் இனம், அடுத்தபடி காங்கிரஸ் ஸ்தாபனம் கேலிக்குரியதாக்கிய ஓர் சமூகம், இன்று வாழ முடியவில்லை! எனவே அவர்கள் மனிதர்களாக வாழ, முன்னேற்றக் கழகக் கொடியின் கீழ் குழுமி பணியாற்ற, அவர்களை நான் அழைக்கிறேன். அது ஒன்றே அச்சமூகத்திற்கு முன்னேறுவதற்கான மார்க்கம்.

நமது கழகத்தின் அடிப்படைக் கருத்துக்களை மக்கள் முன் பரப்ப இப்படி மாநாடு கூட்டுகிறோம். கூட்ட முற்படும்போது ஆட்சிப்பீடம் தனது ஆக்க ஆணவக் கணைதொடுக்கிறது. மனிதாபிமானமும், நாட்டபிமானமும், விடுதலை வேட்கையும், மொழிப்பற்றும் கொண்டவர்கள் எவரும் இந்த அநீதத்தைப் பொறுக்கமாட்டார்கள். குமுறி எழும் எரிமலையாகத்தானே அவர்கள் உலவ முடியும்? இந்த யதேச்சாதிகாரப் போக்கை, அவர்களின் அறைகூவலை ஏற்று அதற்குப் பதில் கூறுவதன் மூலம் நமது இலட்சியத்தை நிலைநாட்ட ஆயிரமாயிரம் வாலிபப் பட்டாளங்கள் போர்க்களம் நோக்கிக் குதிப்பதற்குத் தயாராக உள்ளனர். அவர்களிலே முன்னணி வீரரும் உணர்ச்சித் துடிப்புக்கொண்ட வாலிப வீரரும், பட்டதாரியும், சட்டக்கலை வல்லுனரும் ஆன நம் அன்பிற்குரிய நண்பர் இ.ரெ. இளம்வழுதி அவர்கள் இந்த மாநாட்டிற்குத் தலைமை தாங்க இசைந்து இங்கு வந்துள்ளார்கள். அவர்களை நான் உங்கள் சார்பிலும் வரவேற்புக்குழுவின் சார்பிலும் வரவேற்கிறேன். மாநாட்டைத் திறந்து வைக்கத் தோழர் என். எஸ் இளங்கோ அவர்கள் ஒப்புக்கொண்டு முன்வந்திருக்கிறார்கள். அவர்கள் கட்சியார்வமிகுந்தவர்கள். அந்த ஆர்வத் துடிப்பால் அரசாங்கம் அவருக்கு அளித்த கௌரவ மாஜிஸ்ட்ரேட் பதவியை, பேச்சுரிமை காப்பதற்காக துச்சமென உதறித்தள்ளியவர், அவரையும் நான் உங்கள் சார்பிலும் வரவேற்புக்குழுவின் சார்பிலும் வரவேற்றுக் கொள்கிறேன். அடுத்தபடியாக திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுச் செயலாளர்-'திராவிட நாடு திராவிடருக்கே' என்னும் இலட்சிய முழக்கத்தை சேலம் மாநாடு வாயிலாக தென்னாட்டிலே எழுப்பியவர்-மாணவ உள்ளங்களைக் கொள்ளை கொண்டவர்—தமிழ் காத்த தன்னலமற்ற தியாகி—தென்னாட்டின் பெர்னாட்ஷா—வாலிபப் பட்டாளங்களின் தனிப்பெருந் தளபதி—கட்சித் தோழர்களின் அண்ணா அவர்களை, நாட்டின் 'நல்லதம்பிகளின்' சார்பில் வரவேற்றுக் கொள்கிறேன்.

மாநாட்டின் சொற்பொழிவாளர்களாக இவண் வந்திருக்கும் கழக முன்னணி வீரர்களான அத்தனை பேரையும் நான் இதயபூர்வமாக வரவேற்கிறேன்.

கடைசியாக, தென்னாட்டின் பல பகுதிகளில் இருந்து நாஞ்சில் மாவட்ட தி.மு கழக முதல் மாநாட்டிற்கு வருகை தந்து சிறப்பித்த தோழர்களையும் தோழியர்களையும வரவேற்கிறேன்.

வணக்கம். வாழ்க திராவிடம்!

தி. மு. கழகம்
[4-வது வட்டம்]

—*—

பொதுக் கூட்டம.

5-1-51 வெள்ளி மாலை
5-30 மணிக்கு.

வண்ணாரப்பேட்டை
சோலையப்பன் தெருவில்.

தலைவர்:
கே. கோவிந்தசாமி

பேச்சாளர்:
என். ஜீவரத்தினம்
ஈ. வி. கே. சம்பத்

தொடர் நாடகம்.

திலோத்தமா

தீட்டியது:—கு. தனபலன்.

அங்கம் ௮

இடம்: அரண்மனைத்தோட்டம் ...அரசனின் சமாதி.

[இளவரசி காஞ்சனாவும், ராஜ குருவின் மகள் திலோத்தமாவும் அரசனின் கல்லறைக்கு வணக்கம் செலுத்துகின்றனர்.]

திலோ: அவரது ஆன்மா சாந்தியடையட்டும்......வீணாக வருந்தாதே தோழி!

காஞ்: சொல்வது சுலபம் ஆனால் செய்கையில் காட்டுவது கடினம். திலோத்தமா!..........[கல்லறையை நோக்கி] மாற்றாரும் போற்றும் அளவில் அரசாட்சி செய்து அநியாயமாய் மறைந்த மன்னவரே, என் தந்தையே! உங்களுக்கு இத்தகைய இறுதியா ஏற்படவேண்டும்! ஒரு சிறு பிராணிக்கும் கெடுதல் செய்ய மனதால்கூட என்றும் எண்ணிராத ஏந்தலுக்கா இந்தக் கதி ஏற்பட வேண்டும்? ஐயோ...நினைக்குந் தோறும் என் நெஞ்சு வெடித்து விடும்போலிருக்கின்றதே! அடசதிகாரத் தெய்வமே, நீ இருக்கின்றாயா அல்லது இல்லையா? இல்லை.. ,இல்லை...நீ இல்லை. நீ இருந்தால் என் தந்தை விஷத்தால் அநியாயமாய் மாண்டிருக்க மாட்டாரே! உத்தமன் ஒருவனுக்கு ஊறு செய்ய ஓர் உலுத்தன் முனையும்போது நீ என்ன செய்துகொண்டிருந்தாய்? ஏன் அச் சதிச் செயலைத் தடுத்திருக்கக் கூடாது? அச் செயல் நடைபெறுவது உனக்குத் தெரியாதா அல்லது தெரிந்திருந்தும் அதனைத் தடுக்க உனக்குத் திறமை இல்லையா? ஹூம்.....நான் ஒரு பைத்தியம். காணாத ஒன்றிடம் கண்ணீர் விட்டுக் கதறுகிறேன்.

திலோ: தோழி, வருந்தாதே.......வீரத்தமிழ்த்தாயின் உதிரத்தில் உதித்த நீ இப்படி கண்கலங்கக்கூடாது. அரசரைக் கொன்ற அயோக்கியர்கள்—கொலைகாரர்கள், இன்றில்லா விடினும் ஓர் நாள் நிச்சயம் அதன் பலனை அடைந்தே தீர்வார்கள். இது சத்தியம். அதை நீ உன்னுடைய வாழ்நாளிலேயே காணப்போகின்றாய்! அந்த அக்கிரமக்காரர்கள் இந்த அவனியில் எந்தப் பகுதியில் ஒளிந்துகொண்டாலும் அவர்களை இழுத்துவந்து நானே பலியிடுவேன்!

[மந்திரி மணிவேலர் வருகிறார்]

மணி: மெச்சினேன்........ திலோத்தமா! உன் வீரப் பேச்சுக்களை மெச்சுகின்றேன்...... ஆனால்...

திலோத்: என்ன....ஆனால் என்று பாதியிலேயே நிறுத்தி விட்டீர்களே....ஒருக்கால் இது விஷபத்தில் என் தந்தை குறுக்கிடுவார் என்றுதானே சந்தேகப்படுகின்றீர்கள்........அமைச்சரே, நீதியின் கண்களுக்கு தாய், தந்தை, தனையன், தம்பி, தமக்கை என்ற பாகுபாடு கிடையாது. அப்படி இருப்பின் அது நீதியாகாது. அதை சதி பெற்ற பிள்ளை என்றுதான் சொல்லவேண்டும். குற்றம் புரிந்தவர் நீதியின் இரும்புப் பிடியிலிருந்து அவ்வளவு சுலபமாகத் தப்பித்துக்கொள்ள முடியாது. நீதி, தண்டனை தரும் நீதிபதி என்றால், மனசாட்சி குற்றமிழைத்தவனைக் கூண்டில் நிறுத்தும் காவலாளியாகும். ஆகவே குற்றம் புரிந்தவன் இந்த இரண்டினிடமிருந்து பிரளயமே ஏற்பட்டாலும் தப்பவே முடியாது சூதும்-வாதும் விஷபானங்கள்! அவற்றை அமுதமென்றெண்ணி அரசன் அருந்தினாலும் சரி, ஆண்டி அருந்தினாலும் சரி, அல்லது வேறு எவர் அருந்தினாலும் அவை அவர்களை அழித்தே தீரும். இது உலகறிந்த உண்மை!

மணி: திலோத்தமா...நான் உண்மையிலேயே உவகை கொள்கிறேன். அலி, ஆணழகனாக, மாறிவிட்டால்....புலி, பசுவைப்போல் நடந்துகொண்டால்...பலி, யாகம் இவைகளை பிராமணர் நிறுத்திவிட்டால்... ஆரியம் அழிந்துவிட்டால்......

வைதிகம் வேரோடு சாய்ந்துவிட்டால், எப்படி நான் களிப்படைவேனோ, அப்படித்தான் உனது மொழிகளைக் கேட்டு இறும்பூதெய்துகின்றேன்! ஆஹா...அன்று உன் தந்தை ஆலவாயர் நடித்த நடிப்பு இருக்கின்றதே...அதை நினைத்தாலும் எனக்கு என்ன சொல்வதென்றே தெரியவில்லை! ஹூம்.. ஆட்டை அடித்து அதன் இரத்தத்தை ருசித்துக்கொண்டே அரிமா அகிம்சையைப்பற்றிப் பேசுகின்றது. ஹூம்......நல்ல வேடிக்கை! திலோத்தமா...வீணாக உன்னையும் அந்தப்பட்டியலில் சேர்த்து நினைத்துவிட்டமைக்கு மன்னிக்கவும்...!

திலோ: மந்திரியாரே, நான் சிறுமி......என்னிடம்தாங்களா மன்னிப்பு கோருவது?

மணி: அப்படியில்லை........ அறிவுக்கு அனைவரும் தலைவணங்கித்தானே ஆகவேண்டும். திலோத்தமா! இளவரசியாரை உன் கண்ணின் இமைகளைப் போல் காப்பது உன் கடமை!

திலோ: அமைச்சரே, காஞ்சனா என் உடலில் ஓடும் இரத்தம். அது கெடாதபடி நான் சாக்ரதையாய்ப் பார்த்துக் கொள்வேன்!

மணி: மகிழ்ச்சி...!

காஞ்: அமைச்சரே! வேறு ஏதாவது விசேஷம்......

மணி: இருக்கிறது. இதோ...இன்று ஓர் மடல் தமிழ்ப் பெரியார், ஞானசாகரிடமிருந்து வந்துள்ளது!

காஞ்: (ஆச்சரியமும், ஆனந்தமும் கலந்து) ஆ! அப்படியா? அதில் என்ன குறிப்பிட்டிருக்கிறார்?

மணி: இதோ படிக்கிறேன்.

[மடலைப் பிரித்துப் படித்தல்]

அன்பு வளர்க...அறம் வளர்க

செல்வி!

அரசர்க்கு நேர்ந்த துர்ச்சம்பவத்தை மணிவேலர் எனக்கனுப்பிய மடலின் மூலம் கண்ணுற்றுக் கவலைக் கடலில் மூழ்கினேன். அவரது மறைவு முல்லைநாட்டிற்கே சொல்ல முடியாத நட்டம்! அவரின் மேலான எண்ணங்கள் மேதினியில் மலரும் காலத்தில்தானா, ஐயோ.... அப்பெருந்தகை மறையவேண்டும்? காலதேவன் கருணையை மறந்துவிட்டான்போலும்! எனினும் குழந்தாய் நீ அஞ்சற்க. ஆதவன் உதிக்கிறான்—மறைகிறான். அதனால் பகலும், இருட்டும் மாறி மாறித் தோன்றுகின்றன நிதமும். அதே போல், மனிதர் வாழ்க்கையிலும் இன்ப துன்பங்கள் மாறி மாறி நிகழ்வது இயற்கை. வெள்ளை வானத்தில் திடீரென்று படர்கின்றது மேகக்கூட்டம். வானம் ஒளி இழந்து கன்னங்கரேலென்று காட்சியளிக்கின்றது. பெருத்த இடி, மின்னல், மழை இவைகளுக்குப் பின் வெளுத்துவிடுகின்றது பாலைப் போல....! அதுபோன்றவைதான் மாந்தரிடம் தோன்றும் குறைகளும், கவலைகளும்! நான் ஒப்புக்கொள்ளுகின்றேன். உன் மனக்குறை ஆற்றொணாததுதான். அந்த வேதனை, உன தந்தையாரின் இறப்புக்குக் காரணமாய் இருந்தவர்களைப் பழி வாங்கினால் ஒரு வேளை குறையக்கூடும். உன் எண்ணம் அதுவானால் மந்திரியார் மணிவேலரை முழுமனதுடன் நம்பி, அவர் சொற்கேட்டு நடப்பாயாக! குழந்தாய் இனி உனக்கு அவரே, தாய், தந்தை சகலமும். நிற்க, நான் வடதேயத்தில் அநேக இடங்களைக் கண்டேன். அறியாமையும், மூடப் பழக்க வழக்கங்களும் மலிந்து கிடப்பதைக் கண்டு உள்ளம் பதைத்தேன். அவைகளை அகற்றி, அறிவெனும் விளக்கை ஒவ்வொருவர் உள்ளத்திலும் ஏற்றி, அதில் பகுத்தறிவெனும் எண்ணெயை ஊற்றிவந்தால் நாடு எல்லையில்லா இன்பம் எய்துமென்று போதித்தேன். இவர்களில் பெரும்பாலோர் வெகு மூர்க்கர்கள். பழைய சம்பிரதாயங்களை விடாப் பிடியாய்ப் பிடித்து அனுசரித்து வரும் அட்டைகள். அவைகள் அழிந்தொழிந்து விட்டால்....அல்லது அவைகளை அழித்துவிட்டால், அதாவது அவர்கள் மனதில் படர்ந்துள்ள பாசியை அகற்றிவிட்டால் போதும். என்பணி திருப்தியுறும் வண்ணம் அமையும்வரை நான் இங்கு தங்கி இருக்க உத்தேசித்திருக்கிறேன்! என் வணக்கம் அனைவர்க்கும் உரித்தாகட்டும்.

அன்பன்,
ஞான சாகரன்.

காஞ்: ஆ...ஆ...எத்தகைய அறிவுரைகள்...!

மணி: ஆம், அந்த அறிவுப் பொக்கிஷம் நம்நாட்டில் பிறந்து நமக்கு எவ்வளவோ பெருமையைத் தருகின்றது. அவர் வாழட்டும். அவரது எண்ணமும்—முயற்சியும் பலிக்கட்டும். ஹூம்....தேவி.....திலோத்தமா ......நான் விடை பெற்றுக் கொள்ளுகின்றேன்.

காஞ்: சென்றுவாருங்கள்...!

மணி: திலோத்தமா, நான் சொன்னவை யாவும் உனக்குக் கவனத்தில் இருக்கின்றனவா?

திலோ: அமைச்சரே, அதைப்பற்றி உங்களுக்கு எந்த விதமான கவலையும் வேண்டாம்.

[மணிவேலர் போகிறார்]

மணி: மகிழ்ச்சி......

காஞ்: ஹூம்.......திலோத்தமா....அன்று அரண்மனையில் வாதம் நடத்தி வெற்றி பெற்றாரே, அந்த ஆணழகன் யார்?

திலோ: ஏன்?

காஞ்: இல்லை...சும்மாதான் கேட்டேன்.

திலோ: அன்று விசாரணை நடந்தபோது நீ தூங்கவில்லையோ?

காஞ்: போடி..... குறும்புக்காரி...அவர் யாரடி என்று கேட்டால் ...!

திலோ: அவரா.......அவர் தான், சிற்பி சிங்காரவேலரின் திருக்குமாரன்......பெயர், அருணன் என்பது!

காஞ்: நல்ல கம்பீரமான தோற்றம் — அறிவு நிறைந்த பேச்சு...அழகான முகம்...... ஆண்மையின் சின்னம்.

திலோ: (கேலியாக) இன்னும் மீதி ஏதாவது இருக்கிறதா?

காஞ்: போடி.......இப்படி கேலி செய்தால் எனக்கு கெட்டகோபம் வரும்....!

திலோ: (குறும்பாக) மகாராணி...மன்னிக்கவேண்டும்!

[இருவரும் ஓடிப்பிடித்து விளையாடல்]

அங்கம் 9

இடம்: அரண்மனையை அடுத்த பொய்கை.

[அரண்மனையை அடுத்த பொய்கையில் அரசகுமாரி காஞ்சனாவும், திலோத்தமாவும், சேடிகளும் நீராடிவிட்டு அங்கேயே பூப்பந்து விளையாடுகின்றனர். சிறிது நேரத்தில் ஓர் இனிய குரல் கேட்கிறது. அத் தமிழ்ப் பண்ணை அருணன் இசைத்துக்கொண்டிருக்கிறான்......யாவரும் அவனை நாடிப்போகின்றனர். பாட்டை தட்டென்று நிறுத்தி விடுகின்றான் வளைகளின் ஒலியைக் கேட்டு...தன்னெதிரே அழகே உருக்கொண்ட உயிரோவியங்களைக் கண்டதும் ஒரு கணம் சொல்லொணா ஆச்சரியத்தில் மூழ்குகிறான்... காஞ்சனாவுக்கும் — திலோத்தமாவுக்கும் அப்படியே...!]

திலோ: மன்னிக்கவேண்டும்....தாங்கள்...?

அரு: என் பெயர் அருணன் என்பது...நீங்கள்...?

திலோ: நாங்கள் பெண்கள் தான்...ஏன் அப்படிப் பார்க்கின்றீர்?

அரு: இல்லை......உண்மையில் நீங்களெல்லோரும் பெண்கள்தானா வென்றுதான் பார்க்கின்றேன்.

திலோ: ஏன், உங்களது கண்களுக்குப் பேய்களாகத் தோன்றுகின்றதோ?

அரு: நான் அப்படி ஒன்றும் முற்றும் துறந்த போலிச் சாமியல்லவே! பெண்ணாகி வந்ததொரு மாயப் பிசாசு, என்று பாட...(யாவரும் சிரித்தல்... பின்பு...) ஒரு சந்தேகம்!

திலோ: என்ன அது?

அரு: அழகை, அழகு என்று சொல்வதில் தவறில்லையே!

திலோ: தவறு என்று சொல்பவர் தலையில் ஒன்றுமில்லை என்றுதான் பொருள் கொள்ளவேண்டும்.

அரு: அப்படியானால், நான் சிறிது தைரியமாகவே உங்களை அழகுத் தெய்வங்களே என்று அழைக்கின்றேன். அழகுத் தெய்வங்களே...நீங்களெல்லோரும் யாார்? தயைகூர்ந்து நேரடியான பதிலைத் தரமுடியுமா?

காஞ்: இவர்களெல்லோரும் அரண்மனை சேடிகள்...

திலோ: அவள்......(காஞ்சனாவை காட்டி).

காஞ்: நான்கூட அவர்களில் ஒருவள்தான்.......ஆனால் நானும், இவளும் (திலோத்தமாவைக் காட்டி) ராஜகுமாரியின் அந்தரங்கத் தோழிகள்.

அரு: அப்படியா? நான் உங்களது ராஜகுமாரியைப் பார்க்க முடியுமா?

காஞ்: ஏன்...எதற்காக?

அரு: ஓர் முக்கியமான விஷயத்தைப்பற்றிப் பேசவேண்டும்!

காஞ்: எந்த விஷயத்தை குறித்து?

அரு: சொல்லக் கூடாதது!

திலோ: அப்படியானால் நீர் ராஜகுமாரியை பார்க்கவே முடியாது?

அரு: அம்மா தாயே....... உங்களுக்கு கோடி புண்ணியம். தயைசெய்து இதைமட்டும் சொல்லுங்கள். அரசியல் விஷயத்தைப்பற்றி சிறிது பேசவேண்டும் அவர்களிடம்!

திலோ: ஏன் ராஜகுருவிடம் சொல்வதுதானே?

அரு: (வெறுப்புடன்) ஹூம்...அவனிடமா....சரி, சரி ....தயவு செய்து நீங்கள் சென்றுவாருங்கள். நான் சமயம் நேரும்போது அரசகுமாரியை சந்தித்துக் கொள்ளுகின்றேன்.

[பெண்கள் யாவரும் சிறிது தூரம் சென்று திரும்பி அருணனிடமே வருதல்... அருணன் திகைத்தல்]

அரு: [ஆச்சரியமுடன்] ஏன் திரும்பிவிட்டீர்கள்?

திலோ: நீங்கள்தானே சிறிது நேரத்திற்கு முன்பு சொன்னீர்கள். "சென்று வாருங்களென்று"..........அதன்படியே சென்று...வந்தோம்.

[எல்லோரும் சிரித்தல்]

அரு: சரி...சரி......நீங்கள் வம்புசண்டைக்கு தயாராகத் தான் வந்திருக்கிறீர்கள். எனக்கு நிறைய வேலை இருக்கிறது. நான் போகிறேன்.

[போக முற்படல்—திலோத்தமா குறுக்கே நின்று தடுத்தல்]

திலோ: நீர் இவ்விடத்தை விட்டுப் போக முடியாது!

அரு: ஏன்?

திலோ: ஏனா....இது ராஜகுருவிற்கு சொந்தமான இடம். இந்த இடத்திற்கு நீர் வந்ததே தப்பு....

அரு: [கேலியாக] இது மட்டுமென்ன......இந்த நாடே

(19ம் பக்கம் பார்க்க)

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

ஆஹா என்ன அருமை, என்ன அருமை, கவிதை நயம் வழிவதைக் காணீர் என்று பேச ஆரம்பித்து விடுவீர்கள்.

ஆம்! இந்த உலகத்தில் போலிக்குத்தானே மதிப்பு! உண்மையை உள்ளவாறு எடுத்துக் கூறுபவன் நகைப்புக்கு ஆளாகத்தானே வேண்டியிருக்கிறது!

உலகம் எப்படியோ சுற்றட்டும்! ஆனால் அந்த ஆங்கிலோ இந்தியப் பெண்ணின் முகம், கண்கள்...... எவற்றையுமே என்னால் மறக்க முடியவில்லை.

நான் பார்க்கும் அந்த ஆரணங்குகளின் கால்களிலுள்ள அழகுகூட என் வாழ்நாள் தோறும் என் அருகிலேயே இருக்கப் போகும் என் மனைவியின் முகத்தில் இருக்காதாமே!

செருப்புக் கடையில் இருந்து பழக்கப்பட்ட எனக்கு, காலழகின் தராதரத்தைக் கூடக் கண்டுபிடிக்கும் 'ஸ்பெஷலிஸ்ட்'டாக இருந்த எனக்குஒருயானைக்காலி! முகமோ! குரூபி! என் மனைவி! நினைத்தாலே நெஞ்சம் பதறுகிறது.

* * * *

மற்றொரு நாள் அவ் ஆங்கிலோ இந்தியப் பேரழகி வாங்கிய 'ஷூ'வின் விலைபோக மீதியை அவள் கையில் கொடுக்கப் போனேன். அவளும் வாங்கக் கையெடுத்தாள். மின்சார விளக்கு அணைந்துவிட்டது.

விநாடி நேர எண்ணம்தான்!

அவள் கையை வெடுக்கென்று பிடித்து ஒரு முத்தம் கொடுத்தேன். அவள் ரோஜாமலர் போன்ற கையை என் உதடுகளிலிருந்து எடுக்கும் முன்பே என் உளத்தைப் பெருங்கிலி, பிடித்தாட்ட ஆரம்பித்தது.

விளக்கு எரிந்தது. நான் நடுங்கிப் போனேன்! அவள் சிரித்தாள்.

மறுபடியும் விளக்கணையக் கூடாதா என்றது என் மனம். அவள் சாலையிலே நடந்துகொண்டிருந்தாள்.

இவள் போன்ற அழகிகளைச் சந்திக்கவும், சரசமாடவும் வசதிதருமானால் அக்கடை வடநாட்டானுடையதாக இருந்தால் என்ன? அமெரிக்கனின் சொந்தக் கடையாக இருந்தால் கூட என்ன? அங்கே, அடிமை வேலை கூட செய்யத்தயார் என்றது என் மனம்.

அவள் சாலையிலே போய்க் கொண்டிருந்தாள். அவள் கூட்டத்திடையே மறையும் வரையில் கண்களின் விழிபிதுங்க, உள்ளத்திலே உவகை பொங்க அவளையே பார்த்துக்கொண்டு நின்றேன். என் கையில் அவளுக்குத் தரவேண்டிய மீதி சில்லறை தங்கி இருப்பதைக் கண்டேன். நாளைக்கும் சந்திக்கலாமல்லவா? இன்ப நினைவால் இதயம் துடிதுடித்தது!

கைகளுக்குள்ளே காசைக்குலுக்கிக்கொண்டே, நான் இருந்த வட இந்தியன் கடைக்கு எதிரே நின்று பார்க்கும் ஒரு உருவத்தைக் கண்டேன்.

என் மண்டையில் யாரோ சம்மட்டியால் அடிப்பது போலிருந்தது. அந்த உருவம் உள்ளே வரவும் ஆரம்பித்தது. பழைய நினைவுகள் அதைவிட வேகமாக ஓடி வந்தன.

வடநாடு தென்னாட்டை அரசியலில், சமூகத்தில், பொருளாதாரத்தில் அடிமையாக்கி யிருப்பதை மறுத்து, அன்றொருநாள், கல்லூரித் தமிழ்ப் பேரவையில் ஒரு தேசிய மாணவன் பேசினான்.

"இந்தியா ஒரே நாடு! வடவர் தென்னவர் என்று பிரிப்பது பித்தலாட்டம்" என்பதை மறுத்து பெருத்த கைதட்டலிடையே நான் பேசினேன்.

"தென்னாடு தனியாகப் பிரிவது தேவையில்லை" என்ற தீர்மானம் தோற்றது.

தமிழ்ப் பேரவையில் அந்தத் தீர்மானம தோற்று விட்டதால் திராவிடநாடு பிரிந்துவிடப் போவதில்லை. ஆனால் திராவிடம் தனிநாடாகி விட்டது போன்ற மகிழ்ச்சி எனக்கு இருந்தது. அவன் தலை குனிந்து கொண்டு நடந்தான். இலட்சியம் பெற்ற வெற்றியால் நான் நிமிர்ந்து நடந்தேன்.

இன்று அவனே நான் இருக்கும் 'ஷூ' கம்பெனியில் நுழைகிறான். 'பிளீஸ் கம் இன்' (Please come in) இந்தச் சொற்கள் என்னிடமிருந்து வெளிவரவில்லை. தலை குனிந்து நின்றேன். அவன் கெம்பீரமாக, தன் குறிக்கோள் வெற்றியடைந்து விட்ட ஆனந்தத்தோடு வந்து உட்கார்ந்தான். புன்னகை நெளிய, மகிழ்ச்சி பொங்க என்னைப் பார்த்தான். என்னால் ஏதும் பேச முடியவில்லை. ஒரு பஞ்சாப் ஷூ தேவையென்றான். நான் ஒன்றை எடுத்து நீட்டினேன்.

"திராவிடனின் தொண்டா இது?" அவன் கேட்கவில்லை. ஆனால் அவன் உள்ளம் அப்படித்தான் கேட்டது.

சிரித்துக்கொண்டே பல செருப்புகளை எடுத்துப்பார்த்தான். கடைசியாக

"தோழரே வணக்கம்!" என்றான்.

நான் ஒன்றும் புரியாமல் விழித்தேன்.

"நண்பரே! இவைகள் கேலிச் சொற்களல்ல. அன்று தமிழ்ப் பேரவையில் நீர் என் சிந்தனையைக் கிளறிவிட்டதின் விளைவு...சுருக்கமாகச் சொல்ல வேண்டுமானால் திராவிட நாட்டுப் பிரிவினையின் அறப்போர் ஆரம்பிக்குமானால் அதில் பலியாகும் முதல்வனாகநான் நிற்பேன்...........அன்று வடவர் ஏகாதிபத்தியப் பொருளாதாரச் சுரண்டலை எடுத்துச் சொன்னீர். இன்று நான் அதை உணர்ந்து புரிந்து கொண்டது மாத்திரமல்ல, அறப்போர் ஆரம்பிக்கும் நாளை எதிர் நோக்கியிருக்கிறேன்......... நீரோ?......"

"பொருளாதாரத் தொல்லை...... வேறு வேலையும் கிடைக்க......" என்று இழுத்தேன்.

"......சேரன் செங்குட்டுவன் பரம்பரையினர் கனக விஜயன் தலையிலே அன்று கல்லேற்றி வந்தனர்......இன்று கனக விஜயர்களின் அடிமையாக சேரன் பரம்பரையினர் ஆக்கப் பட்டிருப்பதை மாற்றியமைத்துத்தான் ஆகவேண்டும் என்று தமிழ்ப் பேரவை அதிர வீர முழக்கம் செய்த நீர் இந்த வேலையை......"

மறுமலர்ச்சி மன்றம்

இராயபுரம், சென்னை

20—1—51 சனி மாலை 5-30 மணிக்கு இராயபுரம், அம்மன் கோவில் வீதியில், இம் மன்றத் திறப்பு விழா நடைபெறும்.

தலைவர் :
புதுவை தில்லை அ. பாரி

திறப்பாளர் :
டி. கே. சீனிவாசன்

பேச்சாளர் :
மா. இளஞ்செழியன் B. A. Hons

"......என்ன செய்வது?......... மிக வறுமையான நிலை........." என்று கண்களில் நீர்தளும்பக் கூறினேன்.

"வறுமை! வறுமை! வறுமை! இந்த நாட்டில் எந்தத் திராவிடன் வறுமையின்றி வாழ்கிறான்? இந்த சென்னைத் தெருக்களை ஒரு முறை கண்களை விரித்துப் பாரும்! அந்த வீரர் திலகங்களின் பரம்பரையினர், பல்லையும், தழையையும் கூழாக்கி, அருகே ஓடுகின்ற சாக்கடை நீரில் குழந்தைகள் விளையாட, நாளெல்லாம் இயந்திரங்களென வேலைசெய்தும வயிறு ஒட்டிவாட, பகலிலே வெய்யில் சட்டையையும் இரவிலே பனிப் போர்வையையும் போர்த்திக் கொண்டு வாழ்கிற உம் சகோதரர்களைக் கண்டும ஏதோ ஒரு அறுபது ரூபாய்க்காக திராவிடத்தின் ஏழ்மை நிலைக்கே காரணமானவர்களுக்கு அடிமை வேலை புரிவதா........?".

"போதும் தோழரே போதும்! நைந்துபோன என் உள்ளத்தை இனியும் வாட்டாதீர்......என் கடமைக்கண்களைத் திறந்தீர். ஆம் நான் இன்றே ..இப்போதே..."

"வேலையை விட்டுத்தான் தீர வேண்டும். அப்போதுதான் நீர் திராவிடத்திற்குச் செய்யவேண்டிய தொண்டுகளில் முதலாவதையாவது செய்ததாக ஆவீர்! வருகிறேன், வணக்கம்!"

* * *

நான் ஓட ஆரம்பித்தேன்! பெண்ணும் பொன்னும தருகிறேன் என்றார்களே! அவர்களிடமா? இல்லை!

வேறு வேலை நோக்கியா?

இல்லை!

வீட்டிற்கா?

இல்லவே இல்லை!

திராவிடத்தின் அறப்போர்
முனை நோக்கி!

(17-ம் பக்கத் தொடர்ச்சி)

அவர் கையில்தானே இருக்கின்றது...!

திலோ: என்ன..........நாடு அவர் கையில் இருக்கிறதா?

அரு: சந்தேகமின்றி....!... இன்று அரசாள்வது அவரா அல்லது மகாராணியா? அரசியல் சூத்திரக் கயிற்றை கையில் வைத்திருப்பவர் அவர் தானே! அவர் சொற்படிதானே யாவரும் நடக்கவேண்டும்.

காஞ்: அவரென்ன....அவ்வளவு கெட்டவரா?

அரு: நங்கையரே, உங்களுக்கு ராஜகுரு யாரென்று தெரியாது. அவரைப்பற்றி தெரிந்தவர்கள் ஒரு சிலரே! அவர்களில் நானும் ஒருவன். இறந்துபோன இம் முல்லை நாட்டு அரசரின் சமாதியைக் கேளுங்கள் அது சொல்லும் ராஜகுரு ஆலவாயர் யாரென்று ...!மகாராணியை கையில் போட்டுக்கொண்டு பயங்கர ஆட்சி நடத்தும் அந்த ஆலவாயரின் படுகொலைக்கு ஆளான பாட்டாளிகளின் பிணங்கள் சொல்லும்......கற்பே பெரிதென்று மதித்து அந்த அயோக்கியனின் கரங்களில் சிக்காது தற்கொலை புரிந்துகொண்ட கன்னிகையரின் கல்லறைக் குழிகள் சொல்லும் ஆலவாயன் எப்படிப்பட்டவனென்று....ஹும்....அவனில்லாவிட்டால் இன்று அரசியல் வண்டியின் சக்கரம் சரிவரச் சுழலாது. அவ்வளவு தூரம் இந்நாடு அடிமைப்பட்டுக் கிடக்கின்றது! சரி, ஏதேதோ பேசிக்கொண்டே முடிவில் அரசியலை எடுத்துவிட்டேன். வனிதையர்களே நான் வருகிறேன்... வழி விடுங்கள் தயவு செய்து....!

[போகிறான்—திலோத்தமா கூப்பிடுவதைக் கேட்டு திரும்புகிறான்]

திலோ: என்ன, வீரரே, வருகிறேன் என்று சொல்லிப் போகிறீரே [எல்லோரும் சிரித்தல்]

அரு: இதென்ன தர்ம சங்கடமாய்ப் போய் விட்டது. பூவையரே உங்களுக்கு என்ன வேண்டும்?

திலோ: ஓர் தமிழ்ப்பண்...!

அரு: நாளைக்கு...

காஞ்: இல்லை...இல்லை... இன்றுதான்......அதுவும் இப்போதே வேண்டும்!

[தயங்கி பின்பு பாடுகிறான்... பாட்டு முடிந்தானதும்...]

திலோ: வீரரே, ஒரு வேண்டுகோள்...!

அரு: என்ன அது?

திலோ: நாளைக்கும் இதே இடத்தில்.......

அரு: (புன்முறுவலுடன்) கட்டாயம் வரவேண்டும் அவ்வளவுதானே...ஹும்....கூலியா வேண்டும் கரும்புதின்ன....? நாம் நாளை சந்திக்கலாம்......[அருணன் போகிறான்]

திலோ: கட்டாயம் வர வேண்டும்......!

(தொடரும்)

பொங்கல் வாழ்த்துக்கள்

அழகிய பல நிறங்களில்
பொருத்தமான சுவைமிக்க கருத்துகளோடு
பலவிதமான வாழ்த்துக்கள்

எம்மிடம் கிடைக்கும்.

ஒவ்வொன்றின் விலை அணா 2.

மொத்தமாக 50-க்குக் குறையாமல் வாங்குவோருக்கு 20 %, கழிவு

போர்வாள் அலுவலகம் சென்னை 1.

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

ஒப்பும், தகைமை, எதனையும் அலசி ஆராய்ந்து நோக்கும் அறிவுத்திறன், ஆகிய நல்லியல்புகளே பகுத்தறிவு வாதிகளை வெற்றி மாடிக்கு இட்டுச் செல்லும் படிக் கட்டுகளாம்.

அன்று பகுத்தறிவு வாதிகள் களைக கருத்துகளுக்கு கசையடி கொடுத்த காரணத்தால்தான் மனிதன் காலநடையாகவே எங்கும் நடந்து செல்லும் காலம் மாறி, கப்பலில், விதவிதமான வண்டிகளில் பிரயாணம் செய்யும் காலத்திற்கு மனிதன் வந்திருக்கின்றான். அன்றைய அறிவியல் அறிஞர்கள் சனாதனத்திற்குச் சவுக்கடி கொடுத்ததால்தான் இன்று சந்திரமண்டலத்திற்குச் சென்று ஆங்குள்ளன பற்றை ஆராயவேண்டும் என்ற அறிவுப்பசி. ஆசைத் துடிப்பு மனிதனுக்கு உண்டாகி யிருக்கிறது. உலகம் தட்டை வடிவம் என்ற மூட நம்பிக்கைக்கு மண்டியிட்டுக் கொண்டிருந்த மக்கள் உலகம் உருண்டை உருவந்தான் என்று உணரத் தொடங்கினர். சூரியன் பூமியைச் சுற்றுகிறது என்று புலம்பிக்கொண்டிருந்த மக்கள் பூமிதான் சூரியனைச் சுற்றுகிறது என்ற புத்துணர்வைப் பெற்றனர். இதுபோன்ற எவ்வளவோ மாற்றங்கள், புதுமைகள் ஏற்பட்டுக் கொண்டே யிருக்கின்றன மக்களது மதியிலும் மனதிலும்.

உலகிலே சனாதனக் கள்ளிகள் கிள்ளியெறியப்படும் வரை, இருட்டுக் கோட்பாடுகள் இடித்துத் தகர்க்கப்படும் வரை, மததால் எழும்பிய மடமைக் கருத்துக்கள் மாயும்வரை, பகுத்தறிவு வாதிகளின் பட்டியல் நீண்டுகொண்டு தான் போகும். அவர்களது ஆராய்ச்சியால், ஆற்றிய அறிவுப் பணியால் அற்புத சாதனைகள், ஆச்சரியத்தை விளைவிக்கும் கருவிகள், அறிவை வளப்படுத்துவதற்கான வழிகள் பெருகத்தான் செய்யும். இந்த எழுச்சியை, மலர்ச்சியை எவரும் தேய்த்துவிட முடியாது. ஊற்றிலிருந்து ஈசல் கிளம்புவதுபோல, ஊற்று நீர் பெருக்கெடுத்து ஓடுவதுபோல், பழமைக்குப் பாடை கட்டும் பகுத்தறிவு வாதிகள், படைபடையாகத் தோன்றிக்கொண்டே யிருப்பர்.

ஒரு காலத்தில் விதண்டாவாதி, நாஸ்திகன், நாட்டைக் கேட்டில் ஆழ்த்தும் நயவஞ்சகன், சமூகத் துரோகி, சண்டாளன் என்றெல்லாம் ஏசப்பட்ட பகுத்தறிவு வாதிகள் பிற்காலத்தில் வாழும் மக்களால் விற்பன்னர், விவேகி, சீர்திருத்தச் செம்மல், சிந்தனைச் சிற்பி, உலகப் பெரியார், வீரத்தின் வித்து, உலகத்தாருக்கு உணர்வு ஊட்டிய உத்தமன், புதுமையின் தந்தை, பிறர் நலம் பேணும் பெருந்தகை என்றெல்லாம் புகழ்மாலை சூட்டப்படுகிறார்கள். இந்த நிலை நமக்கும் உண்டு என்ற நினைவைக் கருத்திற் கொண்டு, இந்நாட்டு இக்காலப் பகுத்தறிவு வாதிகள் பணியாற்ற வேண்டும்.

—

கருத்துக் கருவூலம் ! கவின்மிகு வெளியீடு !

"போர்வாள்" பொங்கல் மலர்

வேகவேகமாக அச்சாகி வருகிறது ! ★ பொங்கற் புதுநாளன்று உங்களுடன் தங்கியிருக்க வருகிறது !

* அறிஞர் அண்ணாதுரையின் அரியதோர் எழுத்தோவியம்.

* புரட்சிக் கவிஞரின் சிறந்ததோர் புத்தமுது.

* பேராசிரியர் மு. வ. வின் எழில் ததும்பும் ஆராய்ச்சிக் கட்டுரை.

மற்றும்

செங்கரும்பு போன்ற சிறுகதைகள்,
தெவிட்டாத தேனனைய கட்டுரைகள்,
இன்பத் தென்றல் எனத்தரும் எழில்மிகு கவிதைகள்,
பகுத்தறிவுப் போர்வீரர்தம் வரலாறுகள்,
வைதீகத்தை வீழ்த்தும் வெடிகுண்டுகள்,

இவ்வளவும் உண்டு இந்த ஆண்டு மலரில் !

அழகிய பதிப்பு அரிய கருத்துத் தொகுப்பு !

விலை அணா எட்டு.

முக்கிய குறிப்புகள்

* சந்தாதாரர்கள், மலர் வேண்டுமானல், அதற்கென்று தனியாக 0—9—0 அணா தபால் தலை அனுப்பிப் பெற்றுக் கொள்ளவேண்டும்.

* அடுத்த வார இதழே மலராக வெளிவருவதால் அடுத்த வார இதழ் வேறு தனியாக வெளிவராது.

* மலர், 13—1—51 சனிக்கிழமையன்றே எல்லா ஊர்களிலும் கிடைக்கும்.

* மலர், சொற்ப பிரதிகளே அச்சிடப்படுவதால், வாசகர்கள், உள்ளூர் ஏஜண்டுகளிடமோ, அல்லது 0-9-0 அணா தபால் தலை அனுப்பி நேரில் எங்களிடமோ, பெயரைப் பதிவு செய்து கொள்வது நல்லது.

"போர்வாள்" அலுவலகம்

பவழக்காரத் தெரு :: சென்னை 1.

Edited, Printed and Published bY P. C. Manickavachagam alias Kanchi Manimoliyar Free Printers 147. C al Merchant St., Madras. Joint-Editor, M. Ilancheliyan B. A.(Hon)